விலை ரூபா: 8.00
*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி
*Valampurii*

பக்கங்கள்:– பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 27 வியாழக்கிழமை (13.10.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 298

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## யாழ்.மத்திய கல்லூரி அதிபர் நேற்று மாலை சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபர் கே.இராசதுரை (வயது 55) நேற்று மாலை



இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற யாழ்.பிரதேச செயலகத்தில் கலாசார விழாவில் கலந்துகொள்வதற்காக மோட்டார் சைக்கிளில் சென்று மண்டபத்தின் முன்னால் இறங்கும்போது பிற்பகல் 3.20 மணியளவில் அவர் சுடப்பட்டுள்ளார்.

சூட்டிற்கு இலக்கான அதிபர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமையினால் அவர் அங்கு மரணமானார்.

அவரது உடலில் தலை,நெஞ்சு, கழுத்து மற்றும் கால்பகுதிகளில் ஐந்து சூட்டுக் காயங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு யாழ்.போதனா வைத்திய சாலைக்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி (10 ஆம் பக்கம்பார்க்க)

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபருக்கு நாட்டுப் பற்றாளர் விருது வழங்கிக் கௌரவிப்பு

(கிளிநொச்சி)

கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபரும்,கோப்பாய் பிரதேச எழுச்சிப் பேரவை செயலாளருமான நடராசா சிவ கடாட்சத்திற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் நாட்டுப் பற்றாளர் விருது வழங்கி கௌர வித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் அதிபரும் கோப்பாய் பிரதேச எழுச்சிப் பேரவை செயலாளருமான திரு.நடராசா சிவ கடாட்சம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அவரது வீட்டில் வைத்து தேசவிரோதிகள் நடாத்திய துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டுள்ளார்.

இதை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். பிரபல பள்ளியின் முதல்வராக இருந்து தமிழ்ச் (10 ஆம் பக்கம்பார்க்க)



## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின்

# அதிபர் சுட்டுக் கொல்லப்பட்டதை கண்டித்து

# யாழ்.மாணவர் சமூகம் வகுப்புப் பகிஷ்கரிப்பு

## இன்று முதல் ஒரு வார காலம் மேற்கொள்ள முடிவு

(யாழ்ப்பாணம்)

**கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் அதிபர் ந.சிவகடாட்சம் சுட்டுக்கொல்லப்பட்டமையைக் கண்டித்து இன்று முதல் எதிர் வரும் 19 ஆம் திகதி வரை மாணவ சமூகம் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளது. இதற்கான ஏற்பாட்டை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யம் மேற்கொண்டுள்ளது.**

அதிபர் ந.சிவகடாட்சத்தின் கொலை சம்பவத்தை கண்டிக்கும் முகமாகவும் எதிர்காலத்தில் கல்விமான்களும் தமிழ் தேசிய ஆதரவாளர்களும் படுகொலை செய்யப்படுவதனை தடுப்பதற்காகவும் இன்று முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன் கிழமை வரை குடாநாட்டில் உள்ள அனைத்து உயர்கல்வி (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இனந்தெரியாதகுழு ஊடுருவித் தாக்குதல்

## துணைப்படை வீரர் சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நேற்று நண்பகல் மற்றுமொரு ஊடுருவல் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் துணைப்படை உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மயில வெட்டுவான் சந்தனமடு ஆற்றுப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகள் மீது ஆயுதம் தரித்த குழுவொன்று மறைந்திருந்து தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதேவேளை தாக்குதல் நடத்தியவர்களை தமிழீழ விடுதலைப்புலிகள் பின்தொடர்ந்து சென்றபோது அவர்கள் மாவடிவேம்பு இராணுவச் சோதனைச்சாவடியினுள் பதுங்கிக் கொண்டதாகவும் அப்போது சோதனைச்சாவடியில் இருந்த இராணுவத்தினரும் தாக்குதலை மேற்கொண்டதாகவும் மட்டக்களப்பு அரசியல் துறையினர் தெரிவித்தனர்.

கண்காணிப்புக் குழுவினருக்கு உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளை அவதானிக்குமாறும் மட்டக்களப்பு அரசியல்துறை முறையிட்டது. ஆனால் ஆளணிப்பற்றாக் (10 ஆம் பக்கம்பார்க்க)

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

## அதிபரின் கொலையை கண்டித்து மாணவர்கள் திரண்டு வீதிமறியல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டமையைக் கண்டித்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள் நேற்று வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 11 மணியளவில் கோப்பாய் சந்தியில் ஒன்று கூடிய சுமார் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சந்தியின் நான்கு பக்கங்களிலும் நின்று மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் சுமார் ஐந்து மணிநேரம் அவ் வீதிகளின் ஊடான போக்குவரத்துக்கள் முற்றாகப் பாதிப்படைந்தன. இக் கொலையைக் கண்டித்து கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் ஆதரவுடன் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள் இன்றும் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அதிபரின் கொலை சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களையும் மக்களையும் ஒன்று திரட்டி பாரிய அளவிலான போராட்டத்தில் ஈடுபடப்போவதாக,கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள் எச்சரித்துள்ளனர். (ச–19,37,79)

## தேர்தல் ஆணையாளருடன் கட்சிச் செயலாளர்கள் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் செயலாளர்களை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து கட்சிகளின் செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

மாவட்டங்கள் மற்றும் தேர்தல் தொகுதிகளில் கட்சிகள் தலா ஒரு தேர்தல் பிரசார அலுவலகங்களை மாத்திரமே அமைக்க முடியும் என தேர்தல் ஆணையாளர் இச்சந்திப்பில் தெரிவித்தார்.

இவற்றை அமைக்க உதவித்தேர்தல் ஆணையாளரிடமும் பொலிஸாரிடமும் அனுமதி பெற (10 ஆம் பக்கம்பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# ஜே.வி.பியுடன் இணைந்துகொண்டு ஒருபோதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது

## சுட்டிக்காட்டுகிறது ஐ.தே.கட்சி

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு ஜே.வி.பியுடன் இணைந்து கொண்டு ஒருபோதும் தீர்வுகாண முடியாது. ஜனாதிபதி சந்திரிகாவினாலேயே அது முடியாது போனதாயின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் எப்படி அது முடியும்? என ஐக்கிய தேசியக்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

கொழும்பில் உள்ள எதிர்க் கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கியதேசியக்கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஐக்கிய தேசியக்கட்சியின் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், மறைந்த காமினி திஸாநாயக்கவின் புதல்வருமான நவீன் திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

கடற்கோள் நிவாரணத்திற்கான பொதுக்கூட்டமைப்பு உடனபடிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க துணிந்து கைச்சாத்திட்டதாலேயே ஜே.வி.பி.அரசாங்கத்தையும் தமது கூட்டமைப்பையும் உடைத்துக்கொண்டு வெளியேறியது.

இந்த நிலையில் மஹிந்த ராஜபக்ஸவுக்கும் ஜே.வி.பியினால் இதேநிலைமை ஏற்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜே.வி.பி.யினருக்கும் மஹிந்தவுககும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பநதம் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் எந்தத் தீர்வினையும் எடுக்க இடம் அளிக்காது. இது உறுதி இதனாலேயே நாம் கட்சி பேதமின்றி மனித நேயத்தோடு இன, மத, வேறுபாடுகள் இன்றி செயற்பட விளைகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## அதிபராகக் கடமையேற்பு

(கோப்பாய்)

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் அதிபராக 16வருட காலம் கடமையாற்றிய கே.வி.குணசேகரம் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதையடுத்து அக் கல்லூரியின் பிரதி அதிபராக 8வருடகாலம் கடமையாற்றி பாடசாலை வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட திருமதி சாந்தினி வாகீசன் அதிபராகக கடமையேற்றுள்ளார். (து)

## யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த

# உலக உணவுத்திட்டப் பணிப்பாளர் அபி.வேலைத் திட்டங்களை பார்வை

உலக உணவுத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்களைப் பார்வையிடுவதற்காகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த உலக உணவுத் திட்டப் பணிப்பாளர் 'போல்ஸ் கைற்றி கிறிஸ் றோபசன்' மற்றும் உலக உணவுத் திட்ட இலங்கைக்கான பிரதிநிதி, யாழ். மாவட்ட உலக உணவுத்திட்டப் பிரதிநிதிகள், அலுவலர்கள் ஆகியோர் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளிற்கு சென்று உலக உணவுத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். மற்றும் அகதி முகாம்களில் வாழும் இடம் பெயர்ந்த குடும்பங்களையும் சந்தித்து அவர்கள் குறைகளையும் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

வடமராட்சியில் சுப்பர் மடம் பகுதியில் உலக உணவுத் திட்டதின்கீழ் நடைபெறும் வேலைகளையும் தென்மராட்சிப் பகுதியில் நாவற குழியில் இயங்கும் உலக உணவுததிட்ட உணவுக் களஞ்சியம் நாவற் குழியல் உள்ள பென்னா முருங்கை இந்து மயானத் திருத்தம், சாவகச் சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட இலுவம் பிள்ளையார் கோவில் வீதித் திருத்த வேலை என்பவற்றையும் பார்வையிட்டதுடன் அவ்வேலையினை செயற்படுத்தும் பொது மக்கள், பயனாளிகள் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டனர். உலக உணவுத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட வேலைகள் தமக்கு பூரண திருப்தியினை அளிப்பதாகவும் எதிர் வரும் காலங்களில் மேலும் உணவுத்திட்ட வேலைகளை இனம கண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும உலக உணவுத்திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர், மீசாலையில் நடைபெற்ற பொது மக்களுடனான இக் கலந்துரையாடலின் போது தெரிவித்தார். ஆங்கிலத்தில் உரையாற்றிய அவரது உரையினை உலக உணவுத்திட்டத்திற்கான யாழ். மாவட்ட சிரேஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் குலோத்துங்கா தமிழில் மொழி பெயர்ப்புச் செய்தார். (து-47)

## மாரவிலவில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

# கதிர்காமரின் கொலைக்கு பயன்படுத்தப்பட்டனவா?

மாரவிலவில் கைப்பற்றப்பட்ட சினைப்பர் மற்றும் ஆயுதங்கள், கதிர்காமர் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதா? என்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மாரவிலவில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்த 3 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. சிலாபம் மாரவிலப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை காலை கைவிடப்பட்ட நிலையிலிருந்த பையொன்றிலிருந்து பெருமளவு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது குறித்து விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சிலாபம் பொலிஸ் அதிகாரி காமினி அமரகோன் தெரிவித்தார்.

கொழும்பு குற்றப்புலனாய்வுத் துறையினரும், இரகசியத் தகவல் பிரிவினரும் இச்சம்பவம தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாரவிலவில் கைப்பற்றப்பட்ட சினைப்பர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாக இருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுவதாக பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## இலங்கை மின்சாரசபையின் துணைத்தலைவர் இராஜினாமா

இலங்கை மின்சார சபையின் துணைத்தலைவர் சூழ டி சில்வா இராஜினாமா செய்துள்ளார். மின்சார சபையின் இயக்குநர் ரஞ்சித் பொன்சேகவுடனான முறுகலே இந்த இராஜினாமாவுக்கு காரணம் என்று சூர டி சில்வா கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், இயக்நர் ரஞ்சித் பொன்சேகா கடந்த வெள்ளியன்று எனது அறைக்கு வந்து கடுமையாக விமர்சனம் செய்தார். கடந்த சில வாரங்களுக்கு முன்பாக மின்நிலையங்களைப் பார்வையிட பேரழிவுத் தடுப்பு மையத்தினருடன் சென்றிருந்தோம். அப்போது அவசர எச்சரிக்கை மணி பொருத்தப்பட்டிருப்பது தொடர்பாக அவர்கள் படமெடுக்க விரும்பினார்கள்.

இது பாதுகாப்பு விதிகளை மீறிய செயல் என்று என் மீது குற்றத் தடுப்புப் பிரிவுக்கு பொன்சேகா புகார் செய்தார். இதையடுத்து அமைச்சகச் செயலாளர் பி.வீரஹண்டியிடமிருந்து பொன்சேகாவுக்கு வந்த கடிதத்தில் என் மீதான விசாரணையை இடைநிறுத்தம் செய்திருப்பதாகவும் பொன்சேகாவின் செயற்பாடுகள் குறித்து வருத்தமடைவதாகவும் கூறியிருந்தார்.

மின்சாரசபை உயர் அதிகாரிகளுக்கு பாரிய சலுகைகள் அளித்த முடிவு தொடர்பாக பொறியாளர்கள் தொழிற்சங்கத்துக்கும் மின்சாரசபை நிர்வாக இயக்குநர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதால் மின்சார சபையின் பணிச்சூழல் பாதிக்கப்பட்டிருக்கிறது எனவே நான் இராஜினாமாச் செய்துள்ளேன் என்றார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்பாக மின்சார சபைத்தலைவர் பொறுப்பிலிருந்து ஆனந்த குணசேகர பதவி விலகினார். அவருக்குப் பதிலாக அண்மையில்தான் மின்சாரசபைத் தலைவராக மொக்ஸ்டுவி பிரேஸிஸ் நியமிக்கப்பட்டார். என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

## இராசி பலன்

13.10.2005

(புரட்டாதி 27, வியாழக்கிழமை)

ஏகாதசி பின்னிரவு 02.19 மணிவரை

அவிட்டம் முன்னிரவு 11.37 மணிவரை

இராகுகாலம் 01.32-03.02 மணிவரை

சுபநேரம் 07.32-09.02 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | நல்ல செய்தி, அதிக பிரயாசை, நிலை மாற்றம், அதிகாரம். |
| இடபம் | எதிர்பாராத செலவு, ரோக நிலை, முயற்சி தாமதம், பிரயாணம். |
| மிதுனம் | மனக்கிலேசம், பிரயாண பயம், பண விரயம், காரியத் தடங்கல். |
| கடகம் | சௌக்கிய விருத்தி, போசன சுகம், செல்வாக்கு, காரிய சித்தி. |
| சிங்கம் | காரிய அனுகூலம், மன மகிழ்ச்சி, போசன சுகம், உற்சாகம். |
| கன்னி | வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், சிறு வியாதி, பணவிரயம். |
| துலாம் | மனப்பயம், உடல் நலக்குறைவு, தாய் வழி உறவு, சுபசெலவு. |
| விருச்சிகம் | சகோதரர் உறவு, பிரயாண நன்மை, பெருமையடைதல், போசன நன்மை. |
| தனுசு | மாதர் நட்பு, முயற்சி தாமதம், தன விரயம், நிலை மாற்றம். |
| மகரம் | சயன சுகம், தேக நலன், நல்ல முயற்சி, கற்பனை மிகுதி. |
| கும்பம் | பிரயாணம், சுப செலவு, மனச் சோர்வு, முயற்சி தாமதம். |
| மீனம் | இஷ்டசித்தி, மனமகிழ்ச்சி, போசன சுகம், நல்ல தகவல். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் பழைய மாணவர் சங்கக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.4மணிக்கு வதிரியில் உள்ள அதன் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் என அதன் தற்காலிக செயலாளரும், யாழ்.கல்வியியல் கல்லூரி விரிவுரையாளருமாகிய சி.முகுந்தன் அறிவித்துள்ளார். இக்கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறும் அவர் கேட்டுள்ளார். (த)

## சிறுவர் முதியோர் தினவிழா

(மருதங்கேணி)

வடமராடசி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பணிமனையின் சிறுவர் முதியோர் தினவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினரர்களாக மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன், வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன் மற்றும் வடமராட்சிகிழக்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.தியாகராசா, வடமராட்சி கிழக்கு கடற்றொழில் சமாசத் தலைவர் மு.தங்கவேல் பனை தென்னை வள கூட்டுறவுச்சங்கத் தலைவர் ந.யோகராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கவிதை, கட்டுரை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும், முதியோர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.(த-35)

## சர்வதேச வெள்ளைப் பிரம்புதினம்

யாழ்ப்பாணம், நல்லூர் லயன்ஸ்கழகங்களுடன் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் இணைந்து யாழ். மாவடடத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை கொண்டாடவுள்ளது.

வெள்ளைப்பிரம்புதினப் பேரணியானது யாழ்.மணிக்கூட்டுவீதியிலுள்ள லம்போகிளினிக் முன்றலில் ஆரம்பமாகி நகரப்பகுதிக்கூடாக கடந்து காலை 10மணிக்கு யாழ்.வைத்தீஸ்வராக்கல்லூரியினையடைந்து அங்கு வெள்ளைப்பிரம்புதின சிறப்புக்கூட்டம் நடைபொறும்.

வெள்ளைப்பிரம்புதின சிறப்பு நிகழ்வாக மாலை 7 மணிக்கு மானிப்பாய் கனகசபை வீதியிலுள்ள செல்லமுத்து விளையாட்டரங்கில் யாழ்.விழிப்புலனற்றோர் சங்க சாகித்தியம் இசைக்குழு வழங்கும் இலவச இன்னிசை நிகழ்ச்சி இடம்பெறும். இந்நிகழ்வுகளில் யாழ்.மாவட்ட அரிமாக் கழகங்கள், லியோக் கழகங்கள், விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் பங்குபற்றி நிகழ்வினைச் சிறப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

## சிவராம் கொலை வழக்கு

# விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவு

(கொழும்பு)


ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் படுகொலை வழக்கு விசாரணையின் இறுதி அறிக்கையை தாக்கல் செய்யுமாறு கடுவெல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிவராம் கொலை வழக்கில் சந்தேக நபராகக் கைதுசெய்யப்பட்டுள்ள சிறீஸ்கந்தராஜா தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களுக்காக நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படுவதில்லை, இந்த நிலையில் நேற்று முன்தினம் கடுவெல நீதிமன்றில் சிவராம் கொலை வழக்கு விசாரணை நடைபெற்றது. அ ஆயின்றும் சிறீஸ்கந்தராஜா முன் னிலைப்படுத்தப்படவில்லை.


தொடர்ந்து விசாரணையை மேற்கொண்ட கடுவெல நீதிபதி சாம்ப ஜானாகி ராஜரட்ண, அடுத்த விசாரணை நாளாகிய 25ஆம் திகதியன்று எதுவித கால்க்கெடுவும் கோராமல் முழுமையான இறுதியான விசாரணை அறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்ய வேண்டும் என்று கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

மேலும் சிவராம் கொலைக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் புளொட் சித்தார்த்தனது வாகனம் குறித்த முழுமையான விவர அறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்யுமாறும் சிறிலங்கா நாடாளுமன்றச் செயலாளர் பிரியானி விஜயசேகரவுக்கும் நீதிபதி உத்தரவிட்டார்.

வழக்கிலிருந்து இந்த வாகனத்தை நீதிமன்றம் விடுவித்த போதும் இதுவரை சித்தார்த்தன் அதைப் பெற்றுச் செல்லவில்லை. இதையடுத்து இந்த வாகனம் யாருக்குச் சொந்தமானது என்பது உள்ளிட்ட விவரங்களைத் தாக்கல் செய்ய நாடாளுமன்றச் செயலருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-8)



1969 ஜனவரி 110இல் வங்கத்தில் கச்சார் பகுதியில் நிலநடுக்கம் பூமியை பிளந்தது. (வரைபடம்)



1892 டிசம்பர் 20இல் வட இந்தியாவில் சாமன் பகுதியில், சென்று கொண்டிருந்த ரயில் நிலநடுக்கத்தால் வழியிலேயே நின்றுவிட்டது.



1897 ஜூன் 12இல் அசாமில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் அனைத்து புனிதர் தேவாலயம் நொறுங்கி விழுந்தது.




1905 ஏப்ரல் 4இல் இமாச்சல் பிரதேசத்தில் உள்ள கங்ராவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் கோயில் இடிந்து தரைமட்டமானது.



1934 ஜனவரி 15இல் பீகாரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உருக்குலைந்த பாலம்.



1956 ஜுலை 21இல் குஜராத்தில் அஞ்சார் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்க சேதங்களை பார்வையிட்ட பிரதமர் நேரு.



1967 டிசம்பர் 11இல் மகாராஷ்டிராவில் கொயானா பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அப்போது அணையில் ஏற்பட்ட கீறல்களால் தண்ணீர் கசிந்தது.



1991அக்டோபர் 20இல் உத்தரகாசியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் தலைகுப்புற கவிழ்ந்த கவானா பாலம்.

# பூகம்ப உயிரிழப்பு 81,000 ஆக உயர்வு பலி 200,000 ஐ தாண்டுமென அச்சம்



மணிலாவில் தீவிரவாதிகள் பள்ளி மீது நடத்திய தாக்குதலில் பல மாணவர்கள் காயமடைந்தனர். காயமடைந்த மாணவன் ஒருவனை மீட்புப் பணியினர் சிகிச்சைக்காக தூக்கிச்செல்லும் காட்சி.

பாகிஸ்தானில் பூகம்பத்தில் பலியானவர்கள் எண்ணிக்கை 81 ஆயிரமாக உயர்ந்துள்ளது.



பாகிஸ்தானில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பூகம்பம் அந்த நாட்டையே உலுக்கி விட்டது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள முசாபராபாத்தை மையமாகக்கொண்டு ஏற்பட்ட இந்த பூகம்பத்தில் வடபகுதியில் உள்ள பல கிராமங்கள் மண்ணோடு மண்ணாகிவிட்டன.


இஸ்லாமபாத் ராவல் பிண்டி, லாகூர் ஆகிய மாநிலங்களில் கட்டடங்கள் இடிந்து நாசமானது. பெரும் சேதத்தை சந்தித்த முசாபராபாத்தில் உள்ள "ஊரி" இருந்த இடம் தெரியவில்லை.

இந்த பூகம்பத்தில் பலியானவர்கள் எண்ணிக்கை 40ஆயிரம் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால், கட்டட இடிபாடுகளையும், நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் மண்ணையும் அகற்றிய போது புதைந்த உடல்கள் வெளியே வந்து கொண்டிருக்கின்றன.

இதையடுத்து பூகம்பச்சாவு 81 ஆயிரமாக உயர்ந்துவிட்டது. மீட்புக்குழுவை சேர்ந்த அதிகாரி வாசன் யாகூப் இதை தெரிவித்துள்ளார். பூகம்பம் ஏற்பட்ட பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. மழையால் நிலச்சரிவு ஏற்பட்டு வருவதால் சில இடங்களுக்கு மீட்புக்குழுவினர் செல்லமுடியவில்லை நிவாரணப் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானில் உள்ள நேஷன் பத்திரிகை பூகம்பசாவு 2 இலட்சத்தை தாண்டும் என்று தெரிவித்துள்ளது. சின்னா பின்னமான "ஊரி" பகுதியில் 5நாட்களுக்குப் பிறகு இப்போது சில இடங்களில் மட்டும் மின் விநியோகம் கொடுக்கப்பட்டுள்ளது.

பூகம்பம் ஏற்பட்டு 5 நாட்கள் ஆகிவிட்டதால் மீட்கப்பட்ட பிணங்களும் இன்னும் மீட்கப்படாத பிணங்களும் அழுகத்தொடங்கி விட்டன. இதனால் துர்நாற்றம் வீசி தொற்று நோய் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் பூகம்பப் பகுதிகளில் இருந்து பொது மக்கள் வெளியேற்றப்பட்டு விடுகிறார்கள். (ற)



பாகிஸ்தானில் மீட்புப் பணிகளில் பன்னாட்டு அமைப்புகளும் ஈடுபட்டு வருகின்றன. எனினும், தொடர்ச்சியாக அங்கு மழை பெய்து வருகின்றமையால் மீட்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர்...

# 40 பள்ளிக் குழந்தைகள் பாக்.இல் உயிருடன் மீட்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இடிந்த பள்ளிக்குள் சிக்கித் தவித்த 40 குழந்தைகள் உயிரோடு மீட்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பூகம்பம் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. இந்த பூகம்ப அரக்கன் 80ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாகிஸ்தானியர்களை பலி கொண்டது.

பூகம்பத்தால் பாகிஸ்தானின் வட பகுதியில் உள்ள பல கிராமங்கள் மண்ணோடு மண்ணாகிவிட்டன. இஸ்லாமாபாத், ராவல் பிண்டி, லாகூர், பாலகோட் போன்ற நகரங்கள் சின்னாபின்னமாகி கிடக்கின்றன. பூகம்பத்துக்கு பிறகு பாகிஸ்தானில் தொடர்ந்து சில அதிர்வுகள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் மக்கள் பெரும் பீதியில் உள்ளனர்.

பாகிஸ்தானில் பூகம்பம் பாதித்த பகுதிகளில் பிரான்ஸ் மீட்புக் குழுவினர் இடிந்த கட்டங்களுக்குள் சென்று மீட்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் பாலகோட் நகரில் உள்ள பள்ளிக் கட்டடத்திற்குள் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது இடிபாடுகளுக்குள் இருந்து குழந்தைகளின் அழுகைச் சத்தம் வந்தது.

இதை கேட்டதும் மீட்புக் குழுவினர் உஷாரானார்கள். நவீன எந்திரங்கள் வரவழைத்து கட்டடத்தின் அடிப் பகுதியில் சிக்கி இருந்த 40குழந்தைகளை அவர்கள் மீட்டனர்.

அவர்கள் 3 நாட்கள் உணவு, தண்ணீர் எதுவும் இன்றி சிக்கித் தவித்துள்ளனர். இதனால் அவர்களில் பலர் மயக்கமடைந்து காணப்பட்டனர். உடனடியாக அவர்களுக்கு பிரான்ஸ் மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். தொடர்ந்து அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளைச் செய்து வருகிறார்கள்.

இதேபோல, இஸ்லாமாபாத்தில் உள்ள இடிந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் இருந்து கால் ஒடிந்த நிலையில் ஒரு பெண்ணும், 2வயது குழந்தையும் மீட்கப்பட்டனர். இவர்களும் 3 நாட்களுக்குப் பிறகுதான் மீட்கப்பட்டனர்.

இவர்களை இங்கிலாந்து மீட்புக்குழுவினர் மீட்பு மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானியர்களுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, பிரான்ஸ், ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் நிதி உதவி மற்றும் நிவாரணப் பொருட்களை வாரி வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

## பூகம்ப அனர்த்தத்திற்குள்ளும் கொடூரம்

# தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல்: ஆப்கானில் 19 பொலிஸார் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 19 பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹெல்மந்த் பகுதியில் உள்ள ஒரு மலைப்பகுதிச் சாலையில் கடந்த திங்கட்கிழமை இரவு சுமார் 150 பொலிஸார் வாகனத்தில் பயணம் செய்தபோதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸாரை திடீரென்று மறைவிடங்களில் இருந்தபடி தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். பொலிஸாரும் திருப்பிச் சுட்டனர். இந்த மோதல் செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை நீடித்தது. இதில் சம்பவ இடத்திலேயே 19பொலிஸார் உயிரிழந்தனர். அதிகாலை ஹெல்மந்த் பகுதியின் பொலிஸ் ஆணைத் தலைவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளார்.

இததகவலை ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் யூசப் ஸ்டெனிச்சய் காபூலில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். (ற)

# கவனிப்பாரின்றி அழிந்துகொண்டு போகும் ஊரிக்காடு மயானம்

உரிய பராமரிப்பு இன்றிக் கவனிப்பாரற்ற நிலையில், பற்றைகளும், சிறு செடிகளும் நிறைந்தும், வீட்டுக் கழிவுகள் மற்றும் மிருக கழிவுகள் கொட்டப்பட்ட நிலையிலும், "ஊரிக்காடு இந்துமயானம்" தொடர்ந்தும மக்கள் பாவனையில்தான் உள்ளது.

இப்படியொரு மயானம் எங்கே உள்ளது என யோசிக்கிறீர்களா? வேறெங்குமில்லை. ஒரு மாநகரசபையையும் மூன்றே மூன்று நகரசபையையும் கொண்ட யாழ்.மாவட்டத்தில் ஒரு நகரசபையுயின் ஆதிக்கத்தின் கீழ்தான் இந்த நிலையில் மயானம் உள்ளது.

கம்பர்மலை, கொம்மந்தறை, கெருடாவில், மயலியதனை, ஊரிக்காடு முதலிய பிரதான கிராமங்களைச் சேர்ந்த சுமார் 3000க்கு மேற்பட்ட மக்களின் பாவனைக்காக வல்வெட்டித்துறை நகரசபையின் 2ஆம எல்லைக்குள் அமைந்துள்ள ஊரிக்காடு எனும் கிராமத்தின் கடற்கரையோரமாகவே அமைந்துள்ளது இந்த இந்து மயானம்.


அமைதியான சூழல், வானளாவி வளர்ந்த பல விருட்சங்கள், ஆர்ப்பரித்தும் அடங்கியும் காணப்படும் பாக்கு நீரிணையின் தொடுகடல், கடல் அரிப்பினைத் தடுக்கப் பலமான அணைக்கட்டு, நன்னீர்க கிணறு, அந்திமக் கிரிகைகளை நிறைவேற்றவெனத் திறந்த மடம்- இப்படியாக சகல வழிகளிலும் தன்னிறைவானதொரு மயானமாகவே இது இருந்து வந்தது. இதில் குறிப்பிடத்தக்க விடயம், இங்கு நிறைந்து காணப்படும் ஒருவகை மலர்ச் செடி எம்மவர்களால் 'பட்டி' என அழைக்கப்படும் 'நித்திய கல்யாணி' செடியாகும். இதனை உரியமுறையில் பக்குவப்படுத்தி நீரிழிவு நோய்க்கு மருந்து தயாரிக்கப் பயன்படுத்துகிறார்கள்.



யாழ்.குடாநாடே போருக்கு முகம் கொடுத்துக்கொண்டிருந்த நிலையில், சூரியக் கதிர் நடவடிக்கை மூலம் இப்பகுதிகளையும் சேர்த்து கைப்பற்றிய இராணுவம் அந்திமக் கிரிகைகள் செய்யவென அமைக்கப்படட 'திறந்த மடத்தினை' குண்டு வைத்து தகர்த்தது. அத்துடன் மயானத்திற்கு அடுத்த காணியில் முகாமினை அமைத்துக்கொண்டதுடன் மயானத்தின் மேற்குப் பக்கமாக மயானத்தின் கிணற்றையும் காணியையும் சேர்த்து பாதுகாப்பு வேலியை அமைத்துக்கொண்டனர். 'ஆமை புகுந்த வீடும்.... புகுந்த ஊருமவாழாது' என்பது எம்மவர் மொழி. அருகில இராணுவமுகாம். அந்திமக் கிரிகைகளுக்கு அனுமதி வேண்ட வேண்டிய நிலை. கொஞ்சம் கொஞ்சமாக மயானம் பொலிவிழக்கத் தொடங்கியது. எந்தநேரமும் சென்று வந்த இடத்திறகு மக்கள் போகத தயங்கினா.

குறிப்பாக சிலகாலம் இளைஞர்கள் பாதுகாப்புக் கருதி இந்த மயானம் இருந்த இடத்திற்கு வருவது கூட குறைவு. கிணற்றையும் உள்ளடக்கி பாதுகாப்பு வேலி அமைத்ததால் கிணறும் பாவனையற்று தூர்ந்து போனது.

இந்நிலை குறித்து அப்போதைய நகராட்சி மன்றத் தலைவராக இருந்த சிவாஜி லிங்கத்திடம் பல தடவைகள் முறையிட்



டும், அவர் அப்பகுதிகளைப் பார்வையிட்டு அருகில் இருந்த முகாம் பொறுப்பதிகாரியுடன் கதைத்தும் பலனில்லாமல் போய்விட்டது.

தவிர, கடந்த டிசம்பர்-26 இல் நிகழ்ந்த ஆழிப்பேரனர்த்தத்தால் கடல் அரிப்பினை தடுக்கவென் அமைக்கப்பட்டிருந்த அணைக்கட்டு (அத்திபாரம்) முற்றாக அழிந்து போய் மயானத்தின் ஐந்திலொரு பாகப் பகுதிக்குள் கடல் புகுந்து இன்றுவரை தொடர்ந்தும் கடல் நீரால் அரிக்கப்பட்டு வருகன்றது. தொடரும் கடல் அரிப்பாலும் இனி வரப்போகும் மழைக்காலத்தாலும் மயானத்தின் பெரும்பகுதி கடலாக மாறிவிடும் அபாயம் அதிகமாகவே உள்ளது.

இவை குறித்து பல பொது அமைப்புக்கள், பல தடவைகள் உரிய இடத்திற்கு முறையிட்டிருந்தபோதும், எதுவுமே கவனத்தில் எடுக்கப்படவில்லை. வேறுபல வேலைத்திட்டங்களையும், சில இந்து மயானங்களையும் புனரமைத்து முடிந்த நகரசபை நிர்வாகம் இந்த மயானம் சார்ந்த விடயத்தில் பெரும் மெத்தனப் போக்கையே கடைப்பிடிக்கிறது.

அண்மையில் கூட ஒரு பொது அமைபபு



'சுனாமி மீள்கட்டுமான திட்டத்தின்' கீழ் இந்த மயானத்தினை புனரமைக்க முன்வந்திருந்தது. என்ன காரணமோ யார் காரணமோ தெரியாது ஊரிக்காட்டு மயானம் புனரமைப்புத் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படவில்லை.

இந்த மயானத்தின் இன்றைய நிலை குறித்து இப்பகுதி மக்கள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.க.சிவாஜிலிங்கத்திடம் பலதடவைகள் முறையிட்டும் புனரமைத்து தருவதாக உறுதியளித்திருந்தும் இதுவரை எந்தவொரு மீள்கட்டுமான வேலைத்திட்டங்களும் ஆரம்பிக்கப்படவில்லை. இன்றைய நிலையில், மிகவும அவசிய தேவையாக அவசர வேலைத்திட்டமாக குறைந்தபட்சம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கடல் அணையையாவது மீள அமைத்தால் கடல் அரிப்பில்

**நெற்கொழுதாசன்**

இருந்து மயானத்தினை மீட்கலாம். தவறும 'பட்சத்தில் கடல் புகுந்து மயானம் இல்லாமலும் போய்விடக்கூடும்.

சமூக வாழ்வியலில் உணவு, உடை, உறையுள் வழிபாட்டுத்தலங்கள் எவ்வளவு முக்கிய பங்காற்றுகின்றனவோ அதேபோல் மயானங்களும் முக்கிய பங்காறறுகின்றன. இந்நிலையில், மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டும், வேகமாக அழிவை நோக்கியும் செல்கின்ற இந்த ஊரிக்காடு மயானத்தினை பாதுகாப்பதற்காக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் உடனடி நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். குறைந்தபட்சம் இப்பகுதி பொது அமைபபுக்களையும் இணைத்து மயான புனரமைப்பிற்கான நிர்வாக கட்டமைப்பொன்றினை உருவாக்கி அதன்மூலம் நிதிகளைத் திரட்டியாவது புனரமைப்பினை மேற்கொள்ளவேண்டியது நகராட்சி மன்றத்தின் தலையாய கடமையாகும.

இனியாவது இது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா? என்ற பொதுமக்களின் ஆதங்கம் என்றுதான் தீருமோ தெரியாது.

## பாலகன் காயம்

நகைத்தொழிலில் உபயோகிக்கும் அசிற் போத்தல் தவறுதலாக தட்டுப்பட்டு சரிந்ததில் நுணாவில் மேற்கு மட்டுவிலைச் சேர்ந்த ஒன்றரை வயதுப் பாலகன் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் சிறிதரன் விஜிதன் என்பவரே காது, கன்னம் போன்றவற்றில் காயமடைந்தவராவார்.

இவா சாவகச்சேரி வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (ற-108)

## சாரணர் பாசறை விழா

காங்கேசன் துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு மாவட்ட சாரணர் பாசறை விழாவும், குருளைச் சாரணர் வெளிக்கள நாளும் யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சாரணர் பாசறை விழா நாளை 14ஆம் திகதி மாலை 3.00 மணிமுதல் 17ஆம் திகதி மதியம் 12.00 மணிவரையும் குருளைச் சாரணர் வெளிக்கள நாள் 16 ஆம் திகதி 8.00 மணிமுதல் 5 மணிவரையும் நடைபெறும். (த-7)

## சிரமதானம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச சபை சூழல் பாதுகாப்பு வாரத்தையொட்டி பிரதேச சபை செயலாளர் சி.பசுபதி தலைமையில் பிரதேச ஊழியர்கள் பருத்தித்துறை- கொடிகாமம் வீதி, பருத்தித்துறை சாவகச்சேரி வீதியின் இருமருங்கிலும் உள்ள செடிகொடிகள் என்பனவற்றை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். (த-35)

## சுவரொட்டிகள் அகற்றப்பட்டன

யாழ்.குடாநாடெங்கும் பரவலாக ஒட்டபபடடுள்ள தேர்தல் சுவரொட்டிகள் அகற்றபபட்டு வருகின்றன.

இராணுவ பாதுகாப்புடன செல்லும் பொலிஸார் இப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். நேறறுக் காலையில் யாழ்.வேம்படியில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் சுவரொட்டிகள் அகற்றப்பட்டன. (ற-124)

## மழைநீர் சேகரிப்பு தொட்டி

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினரால் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

காரைநகர் பொது இடங்களான காரைநகர் பிரதேச செயலகம், யாழ்ற்ரன் கல்லூரி, கமநலசேவைகள் நிலையம் என்பனவறறில் இவை அமைக்கப்பட்டு மழைநீர் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (த-246)

## நோயாளர் விடுதி திறப்பு

(காரைநகர்)

காரைநகர் கிராமிய வைத்தியசாலையில் புதிதா்க அமைக்கப்பட்ட நோயாளர் விடுதி கடந்த ஞாயிற்றுக்கிழமை வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

காரைநகர் அபிவிருத்திச் சபைச் செயலாளர் எஸ்.தில்லையம்பலவாணரின் தலைமையில் ந்டைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை சமாதான நீதவான் க.சோமசேகரம் மற்றும் பிரதேச சபை பொறுப்பதிகாரி அ.சிவஞானம், சுகாதார பணிமனை உத்தியோகத்தர் க.இராசநாயகம் ஆகியோர் ஏற்றிவைக்க கலாநிதி க.வைத்தீஸ்வரக் குருக்களினால் விடுதி நாடா வெட்டி திறந்துவைக்கப்பட்டது.

இந நோயாளர் விடுதிக்கு அமரர் இராசநாயகம் ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தினரும், இல்ண்டன் காரை அபிவிருத்திச் சபையினரும் நிதியுதவி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-246)

## நீர் விநியோகம் நிறுத்தப்பட்டதால் இடைத்தங்கல் முகாம் மக்கள் சிரமம்

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள வடமராட்சி கிழக்கு மக்களிற்கு வழங்கப்பட்டு வந்த தண்ணீர் விநியோகத்தை "ஒக்ஸ்பாம்" நிறுவனம் நிறுத்தியுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களிற்கு நிரந்த வீட்டிற்கு செல்லும்வரை தண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வோம் என ஒக்ஸ்பாம் நிறுவனம் வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் தற்போது திடீரென தண்ணீரை நிறுத்தியுள்ளமை குறித்து இப்பகுதி மக்கள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

இதேவேளை, சுனாமியால் பாதிக்கப்பட்ட மாமுனைப் பகுதி மக்களிற்கான நிரந்தர வீட்டுத் திட்டத்தை அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்றுள்ள போதிலும் இதுவரை வீடுகளை அமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிககப்படுகிறது. (த-43)

## மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன

(துன்னாலை)

நல்லூர் பிரதேச செயலக பிரிவிலும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும் சுமார் 40 மலசலகூடங்களை யுனிசெப் நிறுவனம் அமைத்துக்கொடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் எழுபதினாயிரம் ரூபா செலவில மிகச் சிறந்த முறையில் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் இந்நீா அடைப்பு மலசலகூடங்கள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள சொந்தக் காணியுள்ள மலசலகூடமில்லாத சிறுவர்களைக் கொண்ட குடும்பங்களே மேற்படி பிரதேசங்களில் கிராம சேவை உத்தியோகத்தர்களால் பயனாளிகளாகத் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-252)

## சிறுவர் முதியோர் தின போட்டி முடிவுகள்

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தையொட்டி நல்லூர் பிரதேச செயலகத்தால் நல்லூர்க் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டியின் முடிவுகள வெளியாகியுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு,

சர்வதேச சிறுவர் தினப் போட்டி முடிவுகள் வருமாறு,

**சிறுவர் தினக் கட்டுரை**

கீழ்ப்பிரிவு

முதலாம் ஆம்இடம்: கி.கௌதமி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
இரண்டாம் ஆம் இடம் :ச.ஸர்சன்,கல்வியங்காடு இ.த.க.பாடசாலை.
மூன்றாம் ஆம் இடம்:வி.நிவோதினி, ஆனந்த வித்தியாலயம்.

மத்திய பிரிவு

முதலாம்ஆம் இடம் : தி.தமயந்தி, கொக்குவில் ஞானபண்டித வித்தி.
இரண்டாம் ஆம் இடம் :வி.சுமந்தரன், யாழ்.இந்துக் கல்லூரி.
மூன்றாம் ஆம் இடம்:த.நாராயினி, கொக்குவில் இந்துக்கல்லூரி.

மேற்பிரிவு

1ஆம் இடம் : ஜெ.ஜெயதர்சினி, நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி.
2ஆம் இடம் : லோ.கோபிநாத், யாழ்.இந்துக்கல்லூரி.
3ஆம் இடம்: அ.சேனுகா, அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி.

உயர் பிரிவு

1ஆம் இடம் : ப.கஜேந்திரா, யாழ்.இந்துக் கல்லூரி.
2ஆம் இடம் : கே.தர்ஸிகா, கொக்குவில் இந்துக் கல்லூரி.

**சிறுவர்தினக் கவிதை**

கீழ்ப்பிரிவு

1ஆம் இடம் : க.கிர்ஸிகா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
2ஆம் இடம் : யோ.ரஞ்சிதா, யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
3ஆம் இடம்: ச.ததுசன், நல்லூர் ஞானோதயா வித்தி.

மத்திய பிரிவு

1ஆம் இடம் : த.நாராயினி, கொக்குவில் இந்துக் கல்லூரி.
2ஆம் இடம் : த.ஜதுர்சன், யாழ். இந்துக் கல்லூரி.
3ஆம் இடம் : சி.நிவோதன், நல்லூர் இந்து த.பெ.பாட

மேற்பிரிவு

1ஆம் இடம் : ப.ஜெயப்பிரதா, கொக்குவில் ஞானபண்டித வித்தி.
2ஆம் இடம் : பா.பிரமிளா, கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.
3ஆம் இடம்:லோ.றம்யா, நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி.

உயர் பிரிவு

1ஆம் இடம் : ப.கஜலக்ஸ்மி, கொக்குவில் இந்துக் கல்லூரி.
2ஆம் இடம் : ப.பத்மநிருபா கொக்குவில் இந்துக்கல்லூரி.

(தொடரும்...)

# அழியுமா இனவாதம்?



மிகச் சிறிய நாடான இலங்கையில், பிரிவினை எதற்கு? நாமெல்லாம் சேர்ந்து வாழலாமே! என்று இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த போது முடிவெடுத்தவர்கள் தமிழர்கள். இருந்தாலும் இந்த முடிவு தவறு என்று விரைவிலேயே அனுபவரீதியாகப் பாடம் புகட்டினார்கள் பேரினவாத சிங்களத் தலைமைகள்.

ஐம்பதுக்கு ஐம்பது என்ற வகையில் நாட்



டின் உரிமைகளைப் பிரித்துக் கொள்ளலாமே என்று ஜி.ஜி. பொன்னம்பலம் கேட்டபோது, அதை மறுத்த டி.எஸ்.சேனநாயக்க, அதற்குப் பதிலாக 60க்கு 40 என்று பிரித்துக்கொண்டு ஆட்சி அமைக்கும் திட்டத்தை முன்மொழிந்தார். இது வேண்டாம், தருவதாக இருந்தால் 50க்கு 50 தான் என்று அடம்பிடித்தவர் ஜி. ஜி.பொன்னம்பலம். இது வரலாறில் பழைய கதை தான். இது எப்படியோ தூசுதட்டி, அவ் வப்போது பாட்டி கதை போல திரித்தும் கழித்தும் இணைத்தும் குறைத்தும், சிங்கள மக்களை திசை திருப்பும் நடவடிக்கைக்காக பாவித்து வருகிறார்கள் சிங்களப் பேரினவாதிகள்.

## தனிச் சிங்களச் சட்டம்

தமிழர்கள் எல்லாம் சிங்கள மொழி பேச மறுத்ததுபோலவும், அவர்களைக் கட்டாயப்படுத்தி சிங்கள மொழி பேச வைத்துப் பழி தீர்ப்பதால், சிங்கள மக்களுக்கு சித்த பலனனைத்தும் நித்திய பரம்பரைக்கும் கிடைத்துவிடும் என்பது போலவும் திசை திருப்பி, சிங்களம் மட்டும் என்ற புதிய சட்டத்தை 24 மணி நேரத்தில் நடைமுறைப்படுத்துவதாக நம்ப வைத்து, அட்டகாசமான வெற்றியைப் பெற்று ஆட்சியமைத்தவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க.

சிங்களம் மட்டும் என்ற சட்டத்தை அமுல்படுத்த பண்டாரநாயக்க நினைத்தது, சிங்கள மக்களின் நன்மைக்காக என்பது போன்று அவர்களை நம்பவைத்து, ஒட்டுமொத்த நாட்டுக்குமே துரோகம் செய்தவர் பண்டாரநாயக்க. ஆனால், உண்மையில் ஒரு துருப்பைத் தவிர, தேர்தலில் வெற்றி பெற பண்டாரநாயக்கவிடம் வேறு எதுவும் கைவசம் இருக்கவில்லை என்பது தான் உண்மை.

1949இல் எஸ்.ஜே.வி.செல்வநாயகம்



தலைமையில் உருவாகியது பெடரல் பார்ட்டி என ஆங்கிலத்தில் கூறப்பட்ட தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கை இணைத்து, ஒரு பிரதேசமாக சமஷ்டி முறையிலான ஆட்சியமைப்பின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற திட்டத்தை 1951 இல் பிரஸ்தாபித்தார்கள் தமிழரசுக்கட்சியினர்.

இதற்கிடையில் ஐக்கிய தேசியக் கட்சியில் தொடர்ந்தும் இருந்தால் தனக்கு தலைமைப்பதவி கிடைக்க வாய்ப்பில்லை என்பதை உணர்ந்துகொண்ட பண்டார நாயக்க, அதிலிருந்து விலகி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார். 1956இல் பொதுத் தேர்தல் நடைபெறவிருந்த நிலையில், 51 இல் புதிதாகத் தொடங்கப்பட்ட கட்சியைத் நாடு தழுவிய ரீதியில் வெற்றிபெற வைப்பதற்கு புயல் பிரசாரத்தை முன்னெடுக்க வேண்டியிருந்தது. 47இல் ஆரம்பித்து, மக்கள் செல்வாக்கைப் பெற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சியுடன் மோதுவதற்கு, பண்டாரநாயக்க தேடியலைந்து கண்டுபிடித்த பேராயுதம் தான் "சிங்களம் மட்டும்" என்ற பொன்முட்டையிடும் வாத்து. உடனடியாகவே அதன் அறுவடையையும் அவர் கண்டுகொண்டார்.

அரச உயர் பதவிகளில் கோலோச்சிக் கொண்டிருந்த தமிழர்களுக்கு நிகராக சிங்கள மக்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை என்றும், கற்றறிந்த ஞானிகளாக தமிழர்களே கருதப்படுகிறார்களென்றும் உள்ளூர ஆத்திரமடைந்திருந்த சிங்கள இனவாதிகளைத் துணைக்கு அழைத்துக்கொண்டு என்னைத் தேர்தலில் தெரிவு செய்தால் தமிழர்களையெல்லாம் தூக்கி வீசி தமிழ்மொழியையும் அவர்களது கலை, கலாசாரத்தையும் கால்தூசிக்கும் குறைவாக 24 மணிநேரத்தில் மாற்றிக் காட்டுகிறேன் என்று முழங்கினார் பண்டாரநாயக்க.

சிங்கள மக்கள் எதுவித தொலைநோக்குப் பார்வையுமற்று பண்டாரநாயக்கவின் சிங்கள பௌத்த தனியுரிமை ஆணையை அப் படியே நம்பிக்கொண்டு அவருக்கு முழுமையாக



வாக்களித்து அறுதிப் பெரும்பான்மைப் பலத்துடன் அவரை ஆட்சிப் பீடமேற்றினார்கள். உடனடியாகவே இன மோதல்கள் வலிந்து திணிக்கப்பட்டாலும் இவை பொதுமக்களால் கட்டவிழ்த்துவிடப்பட்டவை போலவும் அரசுக்கு இதிலே எள்ளளவும் சம்பந்தம் இல்லை என்பது போன்றுமே உருவாக்கம் செய்யப்பட்டது.

இதனால் தமிழர்களின் அறிவு வளர்ச்சியிலும் உயர் பதவிகளைத் தமிழர்கள் பெற்றிருந்ததிலும் ஆத்திரமுற்றிருந்த சிங்களவர்கள் சிலர் அரசின் நிழல் கூலிகளாக அவ்வப்போது தமிழர்களைத் தாக்கியும் அடித்து விரட்டியும் வந்தார்கள். 1956லிருந்து வருடா வருடம் இனமோதல்கள் ஆங்காங்கே வெடித்துக்கொண்டே இருந்திருக்கிறது.

## பண்டா-செல்வா ஒப்பந்தம்

சிங்களம் மட்டும் என்ற கவர்ச்சி அறிக்கை மூலம் எப்படி பண்டாரநாயக்க சிங்கள மக்களை ஏமாற்றினாரோ அதேபோன்று தமிழ் மக்களையும் 1958இல் ஏமாற்றலாம் என்ற முயற்சியில் இறங்கினார். இதற்காக பண்டாரநாயக்க உருவாக்கியது தான் பண்டா- செல்வா ஒப்பந்தம். வடக்கு- கிழக்கை இணைத்து ஒரு சமஷ்டி ஆட்சியின் கீழ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதாக உறுதியளித்து 58இல் உருவாக்கப்பட்ட ஒப்பந்தம் ஒரு வாரத்தில் அதே பண்டாரநாயக்கவால் மீளப்பெறப்பட்டது.

பௌத்த பிக்குகளின் எதிர்ப்பைக் காரணம் காட்டி தப்பிக்க முயன்றார் பண்டா. எந்த பிக்குகளைத் திருப்திப்படுத்த பண்டா-செல்வா ஒப்பந்தத்தை மீளப் பெற்றாரோ அதே பிக்கு ஒருவரால் 1959இல் சுட்டுக்கொல்லப்பட்டார் எஸ் டபிள்யூ.ஆர் டி.பண்டாரநாயக்க.

பௌத்தம் மட்டுமே தனி மதம் சிங்களம் மட்டுமே தனி மொழி என்ற கவர்ச்சிப் பிரசாரம் மூலம 56 இல் சிங்கள மக்களை ஏமாற்றிய பண்டாரநாயக்க 3 வருடங்களில் அதே மதத்தின் வழிகாட்டி ஒருவரால் சுடப்படுமளவிற்கு அந்த பௌத்த சிங்களவர்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். 60இல் பதவியேற்ற சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்திலிருந்து இன்றுவரை தொடர்கிறது. அன்று பண்டா விதைத்துச் சென்ற வித்தான சிங்கள இனவாதம் இந்த விதை சிறிதாக முளைவிட்டு எழுந்தபோது சுய அரசியல் இலாபங்களுக்காக அதை நீரூற்றி வளர்த்தவர்கள் சிங்களத் தலைமைகள் தான். இதனால் நாட்டுக்கோ மக்களுக்கோ எந்தப் பயனுமில்லை என்பதை விட தீமைகள் ஏராளம் காத்திருக்கின்றன என்பதைத் தெரிந்திருந்தும் தங் கள் பதவிகளைத் தக்க வைத்துக்கொள்ள அடிக்கடி இதே இனவாதத்தைப் பயன்படுத்தினார்கள்.

## பொன்முட்டையிடும் வாத்து

இனவாதம் ஒரு பொன்முட்டையிடும் வாத்தாக அத்தனை இனவாதிகளுக்கும் சுயலாபத்தை அள்ளி வீசியது. இனவாதத்தால் குளிர் காய்ந்த பேரினவாதிகள் ஏராளம். பண்டாரநாயக்கவிலிருந்து இன்றைய சந்திரிகா வரை ஜே.ஆர்., இரத்தினசிறி உட்பட அத்தனை பேரும் இதனைப் பயன்படுத்தினார்கள் விளைவு ஒட்டுமொத்த இலங்கையுமே குட்டிச்சுவராகியது.

இன்னும் சற்று பின்னோக்கிச் சென்று 1952ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்கவின் முதலாவது தேர்தல் வெற்றியைப் பார்த்தால் கூட சிங்கள மக்கள் எவ்வளவு தூரம் ஏமாற்றப்பட்டார்கள் என்பது பட்டென்று புலப்படும். அப்போது நடைபெற்றது ஒரு தேர்தல் கூட அல்ல ஒரு ரெபரெண்டம் அல்லது நம்பிக்கை வாக்கெடுப்பு என்று தான் கூற வேண்டும். நாங்கள் ஆட்சியிலிருக்கும் வரை அது எவ்வளவு காலமாக இருந்தாலும் இந்த நாட்டில் அரிசியின் விலை 25 சதமாகவே இருக்கும் என்று அறிவித்தார் டட்லிசேனநாயக்க. இந்த அரிசி விலைக்காக மட்டுமே, மீதி எல்லாவற்றையும் தூக்கியெறிந்து டட்லியை ஆட்சியிலமர்த்தினார்கள்.

ஆவணியில் ஆட்சிப்பீடம் ஏறிய டட்லி ஐப்பசியிலே தன் வாக்குறுதியை காற்றில் பறக்க விட்டார். அரிசி விலையை அப்படியே வைத்துக்கொண்டு அரிசி விநியோகத்தின் அளவை மூன்றில் இரண்டாகக் குறைத்தார். டட்லி சீனி விலையேற்றம் தொடர்ந்தது. மாணவர்களுக்கான மதிய உணவு நிறுத்தபபட்டது. பாடசாலை சிறார்களுக்கான பால் விநியோகம் நின்றது. புகையிரதக் கட்டணம், முத்திரை விலை போன்றன உயர்ந்தன. இறுதியில் 25 சதம் என வழங்கப்பட்ட அரிசி விலை வாக்குறுதி 70 சதமாக உயர்ந்தது. 1950களில் மூன்றுமடங்காக விலையேற்றம் வழங்குவது என்பது சாதாரண விடயம் அல்ல. 70 சதம் என்பது மிகப் பெரிய தொகையாக இருந்த காலம் அது.

இப்படி வாக்குறுதிகளை வழங்கி வழங்கி தங்கள் வாக்கு வங்கிகளை நிறைத்துக் கொண்டவர்கள் பேரினவாத அரசியல் தலைமைகள். இன்று வரை இது தொடர்கதை தான் .1956இல் கொல்வின் ஆர்.டி.சில்வா தீர்க்க தரிசனமாக ஒரு கருத்தை முன்வைத்தார்.

தமிழர் தாயகப் பகுதிகளை முழுமையாக பிரித்துக்கொடுங்கள் இரண்டு இனங்களும் இரண்டு பிரதேசங்களும் வழமை பெறும் என்றார். அவர் அத்தோடு இன்னுமொன்றையும சொன்னார். தற்செயலாக தமிழர் தாயகப் பகுதிகளைப் பிரித்துக்கொடுக்காது சிறுபான்மை இனத்திற்கு துரோகம் இழைக்க முயற்சித்தால் இந் நாட்டின் இரு இனங்களும் அழிந்து போவதுடன் இரு பிரதேசங்களும் நெருக்கடியையே சந்திக்கும் என்றார்.

இது தான் தீர்க்க தரிசனமான வார்த்தைகள். இதன் இறுதி அத்தியாயத்தை இப்போது பார்க்கிறோம்.

## மஹிந்த ராஜபக்ஷ

வாக்குக்காக மட்டுமே இப்போது வாக்குறுதி கொடுப்பவர் மஹிந்த ராஜபக்ஷ. இவர் தன்னை ஆரம்பத்தில் ஒரு சமாதானப் பிரியர் போன்றும் சாந்த குணம் உள்ளவர் போன்றும் காட்டிக்கொண்டாலும் இவரின் பின்புலத்தை அறிந்தவர்கள் மஹிந்தவின் தளமும், களமும் எது என்று அறிந்திருப்பார்கள். ஹம்பாந்தோட்டையில் றுகுணுப்பகுதியில் பெலியத்த தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர் மஹிந்த ராஜபக்ஷ. சிங்கள இனவெறியருக்கும் காடையருக்கும் தாதாக்களுக்கும் பாதாள உலக கோஷ்டிகளுக்கும் நன்கு பரீட்சயமான பிரதேசமே இந்த றுகுணு சுற்றுவட்டாரம்.

இந்தக் குழுக்களின் தலைமைகளுடன் நல்ல நட்புறவு கொண்டவராக மஹிந்த விளங்கினாலும் வெளியே புன்னகை பூத்தவாறு பொன்மனச் செம்மலாக நடமாடுகிறார்.

பௌத்த மதத்திற்கும் மக்களுக்கும் இவர் ஆற்றிவரும் சேவைக்காக இவருக்கு "சிறிறோகன ஜனரஞ்சன்" என்ற பட்டத்தை பௌத்த அதியுயர் பீடமான மல்வத்தை பீடம், 2000 ஆண்டில் இவருக்கு வழங்கியது. இது பெரும்பான்மை புகழ் சேர்க்கும் விடயம் என்றாலும் சிறுபான்மை இனங்களை நாட்டை விட்டு வெளியேற்றும் இனவாத சக்திகளுக்கான குரலாக இவர் ஒலித்ததற்கே இந்தப் பட்டம் இவருக்கு கிடைத்தது.

இவருக்கு எதிராக இரண்டு கொலை குற்றச் சாட்டுக்கள் இருக்கின்றன. தனது அரசியல் பலத்தை பிரயோகித்து இந்த இரண்டு வழக்குகளையும் மூடி வைத்துள்ளார் இவர். ஏனைய குற்றச் சாட்டுக்கள் ஏராளாம். இவர் தொழில் பார்த்த இடம் ஒன்றும் சாதாரணமானதல்ல. சிங்கள இனவெறிக்கு அடி அத்திவாரமும் தூபமு



மிட்ட துட்டகைமுனு வம்சத்தின் மண் என்றும், பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளின் மண் என்றும் கருதப்படும் தங்காலை என்ற சிங்களக் கிராமமே, மஹிந்த ராஜபக்ஷ சட்டத்தரணியாக தொழிலாற்றிய பிரதேசம். இங்கு இனத்துவேசத்தை யாரும் புதிதாக விதைக்கும் அவசியமில்லை, அவ்வளவிற்கு அது விளைந்து போயிருக்கிறது.

தன்னை ஒரு சமாதானப் பிரியர் போன்று காட்டிக் கொண்டாலும், ஒரு பழுத்த இனவாதக் கொள்கை கொண்டவர் என்பதை, இவர் தென்பகுதி சிங்கள மக்களின் கூட்டங்களில் கலந்துகொள்ளும் போது காட்டிவிடுவார். தற்போது ஊடகங்கள் பலமாக உள்ளதால், கிராமப்புறத்து மக்களிடம் ஒன்றும், மீதிப் பேரிடம்

**இணையப் பார்வை**

வேறொன்றும் கூறும் இவரது யுக்தி கைகூட மறுக்கிறது.



ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு இணங்கி, பாமர சிங்கள கிராமவாசிகள் வாக்கைப் பெறுவது-ஹெல உறுமயவின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு பௌத்த மேலாதிக்கத்தினரின் வாக்குகளையும் அள்ளுவது-பிரபாகரனுடன் நேரே பேசப் போகிறேன் என்று கூறி தமிழரின் முதுகிலும் குத்துவது என்று இவர் எடுத்த நடவடிக்கைகள் முதற்படியிலேயே, ஒரே சறுக்கலாக உள்ளது.

ஊடகங்கள் கண்ணில் எண்ணெய் ஊற்றிக் கொண்டு, மஹிந்த பிரசாரக் கூட்டத்தின் மூலை முடுக்கில் நின்றெல்லாம் செய்திகளைக் கொண்டு வந்து, உடனே பரப்பி விடுவதால், மனிதர் கொஞ்சம் சிரமப் படுவது தெரிகிறது. ஜே.வி.பியுடன் சேர்ந்தேன் என்று சொல்ல வந்தவர், சற்று

(6ஆம் பக்கம் பார்க்க)

# சச்சின் 14

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

மறுநாள் மதிய உணவு இடைவேளைக்குச் சற்று முன் மும்பையின் இரண்டாவது விக்கெற் 206 ரன்களில் விழுந்தது. பலத்த கைதட்டதல்களுக்கிடையே தனது வழக்கமான நான் காம் நிலையில் ஆட இறங்கினான் சச்சின்



பள்ளிப் போட்டிகளும் ரஞ்சியும் எனக்கு ஒன்று தான் என்று சொல்வதைப் போல சச்சினின் வழக்கமான அதிரடி ஆட்டம் துவங்கியது. கண்மூடித் திறப்பதற் குள் சச்சினின் ஸ்கோர் தொன்னூற்று ஐந்தில் இருந்தது.

கூட்டம் ஆரவாரமாக தங்கள் புதிய நாயகனின் ஆட்டத்தை ரசித்துக் கொண்டிருக்க அடுத்த இரண்டு பந்துகளில் சச்சின் தனது நூறாவது ரன்னைப் பூர்த்தி செய்தான். கூட்டம் மொத்தமும் எழுந்து நின்று கரகோஷம் எழுப்பி சச்சினின் முதல் சதத்துக்கான தங்கள் மகிழ்ச்சியையும் பாராட்டுகளையும் இரைச்சலோடு தெரிவித்தது. அந்தப் போட்டி எத்தரப்புக்கும் வெற்றி தோல்வி இன்றி டிராவில் முடிந்தது. வேறு விஷயம் ஆனால் மும்பை அணியின் முதல் இன்னிங்ஸில் சச்சின் அடித்திருந்த அந்தச் சதம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. நிஜமான கிரிக்கெற் என்று வர்ணிக்கப்படும் முதல் தர கிரிக்கெற் போட்டிகளில் சச்சின் முதன் முறையாக விளையாடியது அந்த ரஞ்சி ஆட்டத்தில்தான். அந்தப் போட்டியிலேயே சதமடித் ததன் மூலம் மிக இளம் வயதில் அறிமுகப் போட்டியில் சதமடித்த இந்தியர் என்னும் பெருமை சச்சினைச் சேர்ந்தது. தீவிர கிரிக்கெற்றில் தனது அழுத்தமான முதல் முத்தி ரையைப் பதித்திருந்தான் சச்சின்.

## 5.ரஞ்சிக் காண்டம்

குஜராத் அணிக்கெதிராகத் தொடங்கிய சச்சினின் ரஞ்சிக் காண்டம் அந்தத் தொடர் முழுதும் வெற்றிகரமாகத் தொடர்ந்தது. மும்பை அணியோடு நாடெங்கும் சுற்றி செளராஷ்ட்ரா, பரோடா, மகராஷ்ட்டர, ஹைதராபாத், டெல்லி ஆகிய அணிகளோடு விளையாடினான சச்சின். அந்த ஆண்டு மும்பை அணிக்காக ஆறு போட்டிகளில் விளையாடிய சச்சின் மும்பை வீரர்களிலேயே அதிக பட்சமாக மொத்தம் 583 ரன்கள் குவிந்திருந்தான். ஒரு செஞ்சுரி ஆறு அரை சதங்கள் சராசரி அறுபதுக்கும் மேல்.

இந்த சமயத்தில்தான் 19 வயதுக்கு உட்பட்ட இந்திய அணி பாகிஸ்தானில் விளை யாடச் சென்றது. அந்தத் தொடருக்கு சச்சின் கண்டிப்பாகத் தேர்வாவான் என்று எல்லோரும் காத்திருக்கும்போது எதிர்பாராத திசையிலிருந்து ஒரு தடங்கல் சச்சினின் பள்ளி இறுதித் தேர்வுகளும் பாகிஸ்தான் சுற்றுப்பயணத் தேதிகளும் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொள்ள படிப்புக்கு முக்கியத்துவம் தந்து சச்சினின் பின்வாங்க வேண்டி யதாயிற்று.

சச்சினின் குடும்பம் எப்போதும் அவனது படிப்பு விஷயத்தில் தலையிட்டதோ இதுதான் படிக்கவேண்டும் இத்தனை மார்க் எடுக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தியதோ கிடை யாது. சச்சினின் எதிர்காலம் கிரிக்கெற் தான் என்று அவன் முடிவுசெய்துவிட்டது அவர்க ளுக்கும் தெரிந்திருந்தது. குழந்தைகள் எதை விரும்புகிறார்களோ எதில் சந்தோஷமடை கிறார்களோ அதை அவர்கள் முழுமனதாகச் செய்ய அனுமதிப்பதுதான் நல்லது என்று எண்ணியதால் டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்ஜினீயர் ஆகவேண்டும் என்றெல்லம் சச்சினை நான் வற்புறுத்தவில்லை என்கி றார் அவனது அம்மா ரஜனி டெண்டுல்கர்.

ஆனால் அவர்களுடைய நியாயமான அடிப் படைக் கவலைகளும் சச்சினுக்குப் புரிந்தருந்தது. கிரிக்கெற்றில் அவனது முன்னேற்றங்களைக் கண்டு அவர்களுக்குப் பெருமைதான் என்



றாலும் அவன் தனது படிப்பில் அவ்வளவாக கவனம் செலுத்தாமல் இருந் தது ஒரு கல்லூரி பேராசிரியரான அவனுடைய அப்பாவுக்கு வருத்தமாகவே இருந் திருக்கும்.

ஒரு பிரபல கிரிக்கெற் இதழ் சச்சினின் ரஞ்சிக் கோப்பை ஆட்டங்களை அலசி அவனை கவாஸ்கருடன் ஒப்பிட்டது. கவாஸ்கர்கூட இத்தனை சிறிய வயதில் ரஞ்சிக் கோப்பைக்கு விளையாடவில்லை. ஆனால் சச்சின் இப்போதே தன் வயதுக்கு மிஞ்சிய புத்தி சாலித்தனத் தோடு விளையாடுவதைப் பார்க்கும் போது இந்தச் சிறுவன் வருங்காலத்தில் கவாஸ் கரையும் மிஞ்சுவானோ என எண்ணத் தோன்றுகிறது என்று புகழ்ந்தது அந்தக் கட்டுரை. அதேபோல் சில போட்டிகளில் சச்சின் அபத்தமான ஷாட்களை முயன்று ஆட்ட மிழக்கிற போது சச்சின் தன் வயதுக்கே உரிய துறு துறுப்பில் சில அவசரத் தவறுகள் செய் கிறான். அவற்றைக் கவனித்து திருத்திக் கொண்டால் இன்னும் பெரிதாக வரலாம் என்று சுட்டிக் காட்டிய கட்டுரைகளும் வந்தன. இவை யாவும் சச்சின் என்கிற நம்பிக்கை நட்சத்திரத்தை அவனது ஒவ்வொரு அசைவையும் கிரிக்கெற் ஊடகங்கள் எந்த அளவு முக்கியத்துவம் தந்து கவனித்தார்கள் என்பதற்கான சாட்சிகளாக இருந்தன.

1988 இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் செல்லும் இந்திய அணி அறிவிக்கப்பட்டபோது அதில் சச்சின் இடம்பெறக்கூடும் என்கிற வதந்தி அல்லது எதிர்பார்ப்பு கிரிக்கெற் ரசிகர் களிடையே தீவிரமாகப் பரவியிருந்தது. அப்போது தான் நடந்து முடித்த ரஞ்சித் தொடரில் சச்சின் ஒரு நம்பகமான பேட்ஸ்மேனாகப் பெயர் வாங்கியிருந்ததால் அந்தச் செய்தி நியமாக ஓரளவு வாய்ப்பு இருந்தது.

இந்திய அணி நிர்வாகம் சச்சினை அணியில் சேர்த்துக் கொள்வது குறித்து தீவிரமாக யோசித்தது உண்மைதான். ஆனால் அப்போதைய மேற்கிந்தியத் தீவுகள் அணி மிகவும் பலமானதாயிருந்தது. குறிப்பாக அவர்களது வேகப் பந்துவீச்சு மால்கம் மார்ஷல், கர்ட்லி ஆம்புரோஸ், கோர்ட்னி வால்ஷ் போன்ற மின்னல் வேகம் வீரர்களைக் கொண்டிருந்த அணி அதுவும் அவர்களது சொந்த மைதானங்களில் அவர்களைச் சமாளிப்பது அனுபவமிக்க ஆட்டக்காரர்களுக்கே திண்டாட்டம்தான். இந்த நிலையில் 15 வயதே நிரம்பிய சச்சினை அவர்கள் மத்தியில் களமிறக்கி சோதிக்க இந்திய நிர்வாகம் விரும்பாததால் சச்சின் தேர்வு செய்யப்படவில்லை.

(தொடரும்)

## அழியுமா ....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கு, சேரத்தன் முயற்சிக் கிறேன், இன்னும் இல்லை. ஆனால், சேராமலும் விடவில்லை. என்றாலும் சேருவதும் சேராததும்.... என்று ஏதோ தடுமாறுவது தெரிகிறது. புத்தப்பிக்குகள் கை கொடுப்பார்கள் என்றால், அவர்க ளும் பக்கம் பக்க மாக நிபந்தனை வைக்கிறார்கள்.

1952லிருந்து காலம் காலமாக சிங் கள இன வெறியை தங்கள் பிரதான அங்குசமாகப் பாவித்து, தமிழினத்தை மட்டுமல்ல, ஸ்ரீலங்கா என்ற நாட் டையே துவம்சம் செய்து குட்டிச் சுவ ராக்கிவிட்டார்கள். இப்போது மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ கையிலும், அதே இனத் துவேச, இன வெறி, இன அழிப்பு ஆயுதம் தான். காலங்கள் உருண்டோடினாலும், சிங்கள மக்கள் வறுமையில் வாடினாலும், நாட்டின் பொருளாதாரம் குட்டிச் சுவரானா லும் தன் பதவிக்காக அதே துருப் பிடித்த பழைய ஆயுதம் மீண்டும் தூசு தட்டி மேசைக்கு வருகிறது.

ஸ்ரீலங்கா என்ற நாட்டில் இரு இனங்கள் இருப்பதை ஏற்க மறுக் கும் ஜே.வி.பியுட னும், ஸ்ரீலங்கா பௌத்த சிங்களவர்களுக்கே சொந் தம் என்று ஓலமிடும் ஹெல உறும யவுடனும் ஒட்டுறவு வைத்துக் கொள் ளும் மஹிந்த ராஜபக்ஷ மறைமுக மாக சொல்லி நிற்கும் செய்தி சிறு பான்மை இனங்களின் ஆதரவோ வாக்கு களோ அமோனமோ தனக்கு அவசியமில்லை என்பது தான். சிறு பான்மை என்று சொல்லும் போது, இதற்குள் மலையகத் தமிழர், நாட் டில் வாழும் அத்தனை முஸ்லிம் சமூ கத்தினர் மற்றும் ஒட்டுமொத்த தமி ழரும் அடங்குவர். இவர்கள் அனை வரையும் வேரோடு பிடுங்கி எறிந்து, இவர்கள் யாரினதும் அடிப்படை உரிமை குறித்து தனக்கு எந்தவித அக்கறையும் இல்லை. இந்த சிறு பான்மை இனங்களுக்கு ஸ்ரீலங்கா என்ற நாட்டில் வாழ அருகதையே இல்லை என்பதையே, மஹிந்த ராஜ பக்ஷவின் இனவாத தேர்தல் ஒப்பந் தங்கள் சுட்டிநிற்கின்றன. சிங்கள மக்கள் எவ்வளவு காலம் தான் ஏமா றப்போகிறார்கள்? இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட் டிலே? ஏமா றுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுவதும் நடக்கத்தான் போகி றது. இனவாதம் அழிவதற்கு வாய்ப் பல்லை என்றே தோன்றுகிறது.

## எஸ்.பி யின் விடுதலைக்கு எதிரான மனுமீதான விசாரணை நவ.9இல்

(கொழும்பு)

ஐ.தே.கவின் முன்னாள் அமைச் சர் எஸ்.பி.திஸநாயக்கவின் விடு தலையை எதிர்த்து மேன் முறை யீட்டு நீதிமன்றத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தொடர்ந்த வழக்கு மீது எதிர்வரும் 9ஆம் திகதி விசாரணை நடைபெறவுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதி பதிகள் யகத் பாலபட்ட பெண்டி மற் றும் எரிக்பஸ்நாயக்க ஆகியோர் இம்மனு குறித்து கடந்த திங்கட் கிழமை ஆராய்ந்தனர்.

இரு தரப்பு சட்டத்தரணிகளின் இணக்கத்தின் பேரில் இதனை அடுத்த மாதம் 9ஆம் திகதி விசார ணைக்கு எடுக்க தீர்மானிக்கப்பட் டது.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக் கில் இருந்து அவரை நிரபராதி என தீர்ப்பளித்து மேல் நீதிமன்ற நீதி பதி ரோஹினி பெரேரா விடுதலையை திருந்தார்.

அத் தீர்ப்பானது சட்டத்திற்கு முர ணானது எனத் தெரிவித்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இவ் வழக்கை வேறொரு நீதிமன்றத்தில் நடத்த உத்தரவிடுமாறு கோரி மேல்முறை யீட்டு நீதி மன்றத்தில் மனுத்தாக் கல் செய்துள்ளது. (த-4)

## யாழ்.வாசிக்கு குவைத் நஷ்டஈடு

(கொழும்பு)

குவைத் யுத்தத்தினால் தொழிலை இழந்த அல்லது சொத்துக்களை இழந்த யாழ்.வாசி ஒருவர் அடங் கலாக 47பேருக்கு ஐக்கிய நாடுகள் நஷ்டஈடுகள் ஆணைக் குழுவினால் நஷ்டஈடு வழங்குவதற்கு அங்கீகரிக் கப்பட்டுள்ளது.

எனினும், அவர்கள் மேற்படி நஷ் டஈட்டினைப் பெற முன்வரவில்லை யெனத் தெரிவிக்கப்படுகிறது. எதிர் வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் இந் நஷ்டஈட்டை பெற உரிய நபர்கள் முன்வரவிட்டால் மேற்படி நஷ்ட ஈட்டுத் தொகை மீண்டும் ஐக்கிய நாடுகள் நஷ்டஈடுகள் ஆணைக் குழு விற்கு திருப்பி அனுப்பப்படுமென இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப் புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இல10/2ஆதப்பன்வீதி, இரண் டாம் ஒழுங்கை, குருநகர், யாழ்ப் பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த ஏ.கே.அந்தோனிப்பிள்ளை என்பவ ருக்கும் குவைத் நஷ்டஈட்டுக் கொடுப் பனவு வழங்கப்படவுள்ளது.

நஷ்டஈட்டுக்கு உரித்துடை யோரை எதிர்வரும் 25 ஆம்திக திக்குள் குவைத் யுத்தகாலத்தில் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு அல் லது தற்காலிக கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, வங்கிக்கணக் குப் புத்தகம், பிறப்பு அத்தாட்சிப் பத் திரம் மற்றும் வதிவிடத்தையும் நன்னடத்தையையும் உறுதிப் படுத் தும் கிராம உத்தியோகத்தரின் சான் றிதழ் (பிரதேச செயலாளர் கையொப் பமிடப்பட்டிருத்தல் வேண்டும்).

மேற்படி காலகத்தில் குவைத் தில், ஈராக்கில் தொழில் புரிந்ததை உறுதிப்படுத்துகின்ற வேறேதும் எழுத்து மூல ஆதாரங்கள் மேற்படி நாடுகளினால் வழங்கப்பட்ட வீஸா, அடையாள அட்டை போன்ற ஆவ ணங்களின் மூலப்பிரதிகளுடன் பணியகத்திற்கு வருமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணி யகத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, உரிய ஆவணங் களின்றி நஷ்ட ஈட்டுக்கு விண்ணப் பித்த 4,700 பேரின் விண்ணப்பங் கள் நிராகரிக்கப்பட்டுள்ள போதிலும் அமைச்சரவையின் அனுமதியுடன் அவர்களில் 1600 பேருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டது.

நிராகரிக்கப்பட்ட 300 விண்ணப் பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அமைச்சரவையின் அனுமதியுடன் நஷ்டஈடு வழங்க நட வடிக்கை எடுக்கப்படும் எனத் தெரி விக் கப்பட்டுள்ளது.(ஹ-7,8)

## தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து தேர்தல ஆணையாளர் தயா னந்த திஸாநாயகக, உதவித் தேர் தல் ஆணையாளர்கள் மற்றும் தெரி வத்தாட்சி அலுவலர்களுடன் ஆராயும் விசேட மாநாடு ஒன்று கடந்த திங்கட் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்தல் செயலகத்தில் நடைபெற் றது.

நாட்டில் 22 தேர்தல் மாவட்டங் களைச் சேர்ந்த மாவட்ட தெரிவத் தாட்சி அலுவலர்கள் மற்றும் உத வித் தேர்தல் ஆணையர்கள் இந்த விசேட சந்திப்பில் கலந்துகொண் டனர்.

ஜனாதிபதித் தேர்தலை நேர்மை யாகவும் சுதந்திரமாகவும் நடத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய விசேட நடவடிக் கைகள் மற்றும் தேர்தல் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர் பாக இந்த மாநாட்டில் கலந்துரை யாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகி றது.

அத்துடன்,வடக்கு-கிழக்கு மாகா ணத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களைச் சேர்ந்த வாக்கா ளர்கள் வாக்களிக்கும் பொருட்டு இரா ணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அமைக்கப்படவுள்ள கொத்தணி வாக் குச் சாவடிகளில் மேறகொள்ளப்பட வேண்டிய விசேட ஏற்பாடுகள்,பாது காப்பு நடவடிக்கைகள் குறித்தும் இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப் பட்டதாகத தெரியவருகிறது. (ரு-9)

# இன்று ஒரு தகவல்

## துணிவே துணை

துணிவு என்பது மனித வர்க்கத்திற்கு அவசியமானதொன்றாகும். துணிவுள்ளவர்கள் தம் வாழ்வின் இலட்சியங்களை வென்றெடுப்பதுடன் சுறுசுறுப்புடையவர்களாகவும் காணப்படுகிறார்கள். இத் துணிவு இயல்பாகவே சிலருக்கு அமைந்திருப்பதுமுண்டு. பலர் கல்வி மேன்மை, தொழிற் சிறப்பு,பொருளாதாரச் செழிப்பு, நண்பர்களின் செயற்பாடுகள் போன்ற பல ஏதுக்களாலும் துணிவுள்ளவர்களாக மாறிவிடுவதையும் நாம் காணக்கூடியதாகவுள்ளது. துணிவென்பது அறவேயில்லாதவர்களும் நம்மிடையே அனேகமானோர் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு கிராமத்து முதியவர் தான் கலந்துகொண்ட சம்பவமொன்றை எனக்குச் சொன்னார். இச் சம்பவத்தை உங்களுடனும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

எங்கள் கிராமத்தைச் சூழ நீண்டு பரந்த தென்னந்தோட்டங்கள் நிறைந்துள்ளன. இதனிடையே ஒரேயொரு பாதை மட்டுமே எமது கிராமத்தவர்களின் போக்குவரத்திற்காக இருந்தது. அதுவும் இரண்டுகிலோ மீற்றர் தூரமான மணற் பாதையாகும். இப்பாதையின் மத்தியில் 'வாரி தூங்கிநாவலடி' என்றொரு இடமிருந்தது.

இவ்விடத்திற்கு இப் பெயர் வருவதற்கு ஒரு பழைய கதையொன்று உண்டு. முன்னொரு காலத்திலே வாரி என்றொரு மந்திரவாதி அந்த நாவலில் தூங்கிச் செத்ததாகவும் அவனின் ஆவி இப்போதும் இம் மரத்திலிருப்பதாகவுமே எமது கிராமத்து மக்களால சொல்லப்படுவதுண்டு. இதை உண்மைப்படுத்துவது போல அந்த நாவலும் உருண்டு திரண்டதுடன் பரந்து படர்ந்தும் காணப்பட்டது. அதனருகே ஒரு பனைமரமும் உயர்ந்து வளர்ந்து ஆடி அசைந்துகொண்டு நின்றது. இதன் கீழாலேயே எமது கிராமத்தவர்கள் போக்குவரத்துச் செய்தார்கள். பலர் பகலிலும் கூட பயம் நிறைந்தவர்களாகவே அதைக் கடந்து செல்வார்கள். இரவு வந்துவிட்டால் அதிகமானோர் தனித்துச் செல்வதில்லை. யாருடனாவது சேர்ந்துதான் செல்வார்கள்.

இருபது வருடங்களுக்கு மேலாகத் தானிருக்கும் அன்றொரு பூரணை நாள் வெண்ணிலவோ தன்னொளியால் மண்ணுலகை குளிப்பாட்டிக்கொண்டிருந்தது. காற்றுமோ மரங்களை மட்டுமல்ல மனிதர்களையும் அசைப்பது போல வீசியது. நான் வெளியூர் ஒன்றிற்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். நேரமோ இரவு பத்து மணியிருக்கும். விரைவாக நடந்து வந்தேன். இந்த நாவல் மரத்துக்குச் சற்றுத் தூரத்தில் இருபத்தைந்து பேரளவில் கூட்டாக நின்று ஏதோ கதைத்துக் கொண்டு நின்றார்கள். நான் எதையுமே யோசிக்காமல் அவர்கள் நின்ற இடத்தை அணுகி கவனமாகப் பார்த்தேன். சிலர் எமது கிராமத்தவர்கள். பலர் அயற் கிராமத்தவர்கள். இவர்கள் எல்லோரும் என்னை யாரென்று அறிந்துகொண்ட பின் "ஐயா! என்னென்று போறது...? எங்களுக்கு இன்றிரவு ஒரு கலியாண வீடு அதுதான் மணமகனுடன் வந்து நிற்கிறம். முகூர்த்த நேரமும் ஒன்பது மணிக்கு. இப்ப பத்து மணியாச்சு. இந்த நல்ல நாளிலைதான் அதின்ரை கொண்டாட்டமும் நடக்குது"என்றார் அவர்களில் ஒருவர்.

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "என்ன கொண்டாட்டம்" என்று கேட்டேன். "வாருங்கோ.ஐயா காட்டிறம்" கொஞ்சம் முன்நோக்கி எல்லோரும் சேர்ந்து நடந்தோம். நாவல் மரத்தை அணித்தவுடன் அவர்கள் நின்றுவிட்டார்கள். நான் நாவலின் கீழ்ப் பாகத்தையே கூர்ந்து பார்த்தேன். அதன் கிள்ளையொன்றில் முன்னும் பின்னுமாக ஏதோ ஆடுவது போல இருந்தது. சற்று முன் சென்று மீண்டும் குறிப்பாகப் பார்த்தேன். கடுங் காற்றினால் கிளைகள் மேலும் கீழுமாக அசைந்தாடிக் கொண்டிருந்தது. அதனிடையே தரையிலிருந்து மூன்றடி உயரத்தில் ஒரு பெண் ஊஞ்சலாடுவது போன்ற சாயல் தான் தெரிந்தது."என்ன ஆடுகிறது?"என்று என் பின்னால் நின்றவர்களைக் கேட்டேன்."பிறகென்ன ஆடுகிறது...? பேய் தான் ஊஞ்சலாடுகிறது"என்றார் ஒருவர்.

எனக்கோ பேயில் நம்பிக்கையில்லை. இதனால் என் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சொன்னேன். நான் முன்னே போகிறேன் "நீங்கள பின்னால் வாருங்கள் " என்று சொல்லிக் கொண்டே இரண்டு கைகளிலும் கணிசமான ஒவ்வொரு கல்லை எடுத்துக்கொண்டு விரைந்து சென்று ஒன்றன் பின் ஒன்றாக எறிந்தேன். அப்போது டொல்...டொல் என்று சத்தம் கேட்டது. இச் சத்தத்திலிருந்து அதுவொரு லேசான பொருள் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. உடனே அவ்விடத்துக்குச் சென்று பார்த்தேன்.அருகே நின்ற பனையால் வீழ்ந்த காவோலையொன்று நாவல் மரக்கிளையிற் தொங்கியபடி காற்றிலாடிக கொண்டிருந்தது. நான் அதைக் கழற்றி காலில போட்டு மிதிததேன். அப்போது அங்கே நின்றவர்கள் தங்களின் துணிவின்மையை நினைத்து வெட்கமடைந்தவர்களாய் மௌனமாக நானே அவர்களிடம் கேட்டேன் "இது தானே உங்கள் கலியாண கொண்டாட்டத்திற்கு குறுக்கே நின்ற பேய்...?" அதன் கதையை முடித்து விட்டேன். இனி உங்கள் கலியாண அலுவல்களைப் பாருங்கள் என்றேன். நன்றி ஐயா உங்களின் துணிவைப் பாராட்டுகின்றோம் என்று சொல்லிக்கொண்டே தன்னை முந்திச் சென்றார்களென்று அம் முதியவர் கூறினார்.

இச்சம்பவம் எமக்கு எதையுணர்த்துகிறது? துணிவின்மையால் சிலரது அன்றாட இயல்பு வாழ்க்கையே பாதிக்கப்படுவதைத் தானே. இப்படியே இன்னும் எத்தனையோ சந்தர்ப்பங்களில் துணிவின்மையால் பலர் தம் வாழ்வில் பின்னடைவைச் சந்திததிருக்கிறார்கள். மேலும் இத் துணிவு பல சந்தர்ப்பங்களில் எத்தனையோ உயிர்களைக் கூட காப்பாற்றியுள்ளது.

அண்மையில் எனது வீட்டினருகேயுள்ள ஒரு கிணற்றில் ஒரு குழந்தையொன்று தவறி விழுந்துவிட்டது. அப்போது அங்கே நின்ற ஆண்கள் நீண்ட தடி எடுங்கோ... கயிறு எடுங்கோ... என்று ஆரவாரம் போட பதினெட்டு வயதுடைய யுவதியொருத்தி கிணற்றில் இறங்கி குழந்தையை உயிருடன் மீட்டாள். இந் நிகழ்வில் எதைப் பாராட்ட வேண்டியுள்ளது...?துணிவின் துணையைத் தானே.

**எழுதுமட்டுவாளூர், எஸ்.எஸ். காசிப்பிள்ளை**

# சு.க வின் விஞ்ஞாபனம் 16 இல் வெளியீடு பட்ஜெட் நவம்பர் 8 இல் சமர்ப்பிப்பு

## அமைச்சர் மங்கள சமரவீர அறிவிப்பு

(கொழும்பு)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம எதிர்வரும் 16ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிததார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்தார்.

அம் மாநாட்டில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் 2004ஆம் ஆண்டு கொள்கைத் திட்டங்களை எதிரொலிக்கும் வகையில் சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் இருக்கும். அதனால் அனுரா பண்டாரநாயக்க உட்பட எவரும் சுதந்திரக் கட்சியின் பொருளாதார செயல்திட்டங்கள் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை.

எதர்வரும் ஞாயிற்றுக்கிழமை இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படவுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றால் அனுரா பண்டாரநாயக்க பிரதமராக நியமிக்கப்படுவா.

இது சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவு. இதில் எவ்வித மாற்றமும் இல்லை. எதிர்வரும் நவம்பர் 8ஆம் திகதி நிதி நிலை அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். நாடாளுமன்றத்தில் நிதி நிலை அறிகைகை சமர்ப்பித்தல் மட்டுமே செய்யபபடும். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ஆனதிற்கு பின்னரே நிதி நிலை அறிக்கை அறிவிப்புகள் செயற்படுத்தப்படும். நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்வதை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்தாலும் நாடாளுமன்றத்தில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸை தவிர்த்து 119 உறுப்பினர்களின் ஆதரவு பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு உள்ளது.

நாங்கள் நிலையான அரசாங்கத்தைப் பெற்றுள்ளோம். தொடர்ந்து 6 ஆண்டுகளுக்கு எங்களது அரசாங்கம் நீடிக்கும் என்றார். (ற)

# ஐ.தே.க முக்கியஸ்தர்கள் மூவர் —ரணிலுடன் முரண்பாடு?—

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அக்கட்சியின் 3முக்கிய தலைவாகள் முரண்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேசசாளர் ஜீ.எல்.பீரிஸ்,முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட , சபாநாயகர் ஜே.எம். லொக்குபண்டார ஆகியோர் கட்சிப்பணிகள் மற்றும் ரணிலின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

ஊடகமாநாடுகளை திஸ்ஸ அத்தநாயக்கவே தொடர்ந்து நடத்தி வருவதை சுட்டிக்காட்டும் ஐ.தே.க. வட்டாரங்கள் ஜீ.எல் பீரிஸ் வகித்துவந்த ஊடகப் பேசசாளர் பொறுப்பு விரைவில் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கின்றனர்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட தேர்தல் அறிக்கையின் வாக்குறுதிகள் சாத்தியமற்றவை என்பதால்தான் ஜீ.எல்.பீரிஸ் ஒதுங்கியிருப்பதாக பிரதியமைச்சர் சிறிபதி சூரியராச்சி தொவித்துள்ளா.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினா ரவி கருணாநாயக்கவும் அண்மைக்காலமாக அக் கட்சியில் முதன்மைப்படுத்தப்பட்டு வருகிறார்.

ரவி கருணாநாயக்க மற்றும் ஊடக ஆலோசகர் லசந்த விக்கிரமதுங்க ஆகியோரது ஆலோசனையின அடிப்படையிலேயே மலிந்த மொறகொடவும் ரணிலின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளிலும் கட்சிப் பணிகளிலும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க தன்னை தேர்தல் பிரசாரத்திற்கு அழைக்காததால தான் சபாநாயகர் பதவியிலிருந்து வலகவில்லை என்று லொக்குபண்டார கூறிவந்தாலும் அவர் சுதந்திரக் கட்சிக்கு தாவக்கூடிய ஐ.தே.கவின் பட்டியலில் முதலிடத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-4)

# எமது நிபந்தனைகள் புறக்கணிக்கப்படின் மஹிந்தவை தோற்கடிப்போம் - ஹெல உறுமய

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைகளில் ஜாதிக ஹெல உறுமயவின் நிபந்தனைகளுக்கு அமைவான சரத்துக்கள் உள்ளடக்கப்படாதுவிடின் அவரைத் தோற்கடிக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று ஜாதிக ஹெல உறுமயக கட்சி எச்சரித்துள்ளது.

மஹிந்தவின் பரப்புரைகள் குறித்து கருத்து வெளியிட்ட போதே அக்கட்சியினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

மஹிநத ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைகள் தற்போது கூட்டணிக கட்சித் தலைவர்கள் மத்தியில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அதில் ஒரு பிரதி எமக்குக் கிடைத்துளளது. அதில் நாம் வைத்த நிபந்தனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனினும் தேர்தல பரப்புரைகளின இறுதிப் பிரதியில் ஏதேனும் மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டு நமது நிபந்தனைகள் புறக்கணிக்கப்படுமாயின் மஹிந்தவுக்கு எதிரான பரப்புரைகளை முன்னெடுத்து அவரது தோல்விக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே கட்சியின் நிலைப்பாடு எனவும் அக்கட்சி மேலும தொிவித்துள்ளது. (ற)





**கைதடி அரச முதியோர் இல்லதத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சர்வதேச முதியோர், சிறுவர், வலுவிழந்தோர் விழாவின் இறுதி நாள் நிகழ்வில் கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் செ.யோகானந்தராசா வரவேற்புரையையும், கைதடி குருசாமி குருக்கள், வணபிதா ரவிச்சந்திரன் அடிகளார் ஆகியோர் ஆசியுரையையும் நிகழ்த்தினர். தலைமையுரையை வட கிழக்கு மாகாண சமூக நலத் துறை திணைக்களப் பணிப்பாளா திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளையும் பிரதம விருந்தினர் உரையை யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமியும்நிகழ்த்தினர்.**

**இறுதியாக கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இந் நிகழ்வுக் காட்சிகளைப் படங்களில் காணலாம்.**

**(படங்கள்:- சுரேஸ்)**

# பொதுக்கட்டமைப்பின்றி முடங்கிக் கிடக்கும் மீளமைப்புப்பணிகள்

## புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி கவலை

நேற்றைய தொடர்ச்சி...

திருகோணமலைக்கு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு பொருட்களை கொண்டு செல்லும்போது, மட்டக்களப்பு பிரதேசத்திற்கு எமது பணியாளர்கள் செல்லும்போது இராணுவமும் காவல்துறையும் அத்துமீறல்களைச செய்கின்றன. யாழ்.மாவட்டத்திற்கு இந்த மாதத்தில் பொருட்கள் கொண்டுசெல்லும்போது திருப்பி அனுப்பப்பட்டது. இவ்வாறான நடவடிக்கையின் போது அவசரகாலச் சட்டம் அமுலில் இருப்பதால் ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாதுள்ளது.

குறிப்பாக ஒருவரைக் கைது செய்தால்கூட ஒருமாத காலப்பகுதிக்கு எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. எமது பணியாளர் மட்டக்களப்புக்குச் செல்லும்போது தாக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான நடவடிக்கையின் போது அவர்களால் பணியாற்றுவது மட்டுமல்ல வேலைத் தளங்களுக்கு பொருட்களை நகர்த்துவதும் சிரமமாக உள்ளது. அதுமட்டுமன்றி தற்போதய அரசியல் சூழ்நிலையில் எம்முடன் பணியாற்றும் சர்வதேச பணியாளர்கள் தொண்டர்கள் கூட அச்சம் அடைந்துள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து 50க்கு மேற்பட்ட தொண்டர்கள் இங்கு வந்து பணியாற்றி வந்தனர் தற்போது நடைமுறையில் உள்ள அவசரகாலச்சட்டத்தால் அவர்கள் தமது சொந்த நாட்டுக்குச் சென்று விட்டனர். இது ஒட்டுமொத்தமாக வளங்களைப் பெறுவதற்கும் அவ்வளங்களை வேலைத்திட்டத்திற்கு நகர்த்துவதற்கும். அவற்றை திட்டமிட்டு பயன்படுத்துவதற்கும் பல சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது.

படைகளின் நடவடிக்கைகளால எமது பணிகளை இடைநிறுத்தவில்லை பல்வேறு சிக்கலின் மத்தியிலும் தொடர்கிறோம்.

***கேள்வி:-*** தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்னெடுக்கும் பணிகளிற்கான நிதியீட்டம் பற்றி அதாவது இந்தப் பணிகளில் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதிப் பங்களிப்பு, கழகத்தின் சொந்த நிதி இரண்டினதும் பயன்பாடு பற்றி விளக்குங்கள்?

***பதில்:-*** தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு ஆழிப்பேரலைக்குப் பின்னரான துரித செயற்பாட்டுத் திடடத்தில் கட்டம் 1, கட்டம் 2க்கு 60வீத நிதி புலம்பெயர்ந்து வாழ்கின்ற எமது மக்களால் வழங்கப்பட்டது. மிக வேகமாக குறிப்பிட்ட காலப் பகுதியில் அவர்கள் அந்த நிதியை அனுப்பியதால் எங்களால் செயற்பட கூடியதாக இருந்தது. கட்டம் 3-ஐப் பொறுத்த வரையில் கூடுதலான நிதியை சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அந்தந்த நாடுகளில் இருக்கும் எங்களுடைய புலம்பெயர்ந்த மக்களின் அமைப்புக்களே உதவி செய்கின்றன.

தற்போது நாங்கள் 33சர்வதேச நிறுவனங்களுடன் வேலைசெய்து கொண்டிருக்கின்றோம். Un Agencies உட்பட 33 சர்வதேச நிறுவனங்களுடன். இவர்கள் திட்ட ரீதியாக ஒவ்வொரு திட்டங்களை பொறுப்பெடுத்திருக்கின்றார்கள்.

கட்டம் 3-ஐப் பொறுத்தவரையில் புலம் பெயர்ந்த மக்களிடம் இருந்து நாம் பெரிய அளவில் நிதியை எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் அவர்கள் கட்டம் 1,கட்டம் 2-க்கு நிதியைத் தந்திருக்கின்றார்கள். கட்டம் 3-இற்கு அவர்கள் அந்த நாட்டு மக்கள் அமைப்புக்களிடம் இருந்து நிதியை திரட்டி அனுப்பும் பணியைத்தான் செய்து கொண்டிருக்கின்றார்கள். மற்றும்படி நாங்கள் சர்வதேச நிறுவனங்களை பயன்படுத்திக்கொண்டிருக்கின்றோம்.

எம்முடன் கூடுதலாக சர்வதேச நிறுவனங்கள் செயற்படுகின்றன. அவர்கள் [illegible] வழங்குகிறார்கள். எங்களுடைய பணிகளில் காலதாமதம் இருந்தாலும் 100-க்கு 100 வீதம் எங்களுக்கு பங்களிப்பு செய்துகொண்டு இருக்கிறார்கள் ஆழிப்பேரலைத் திட்டத்திற்கு மேலாக நாங்கள் போருக்குப் பிந்திய புனர்வாழ்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறோம்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் பணிகளை ஒட்டுமொத்தமாக செய்கின்றோம். கிராம அபிவிருத்தித் திட்டம் குறிப்பாக சொல்லப்போனால் வீடு அமைத்தல், குடிநீர் வழங்கல், மலசல கூடம் அமைத்தல், வீதி அமைத்தல் மக்களுக்கு வாழ்வாதார வருமானம் வழங்கும் திட்டம். இவ்வாறு தற்போது நாங்கள் கிட்டத்தட்ட 60கிராமங்களில் பணி செய்கின்றோம். பெருமளவு நிதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊடாகவும் கார்ப் திட்டம் GTZ மற்றும் உள்ளூர் அமைப்புக்களின் உதவியுடன் இதைச் செய்கின்றோம் இந்தப் பணிகளை வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் அமைப்புக்கள், அதாவது ஒவ்வொரு நாட்டு புனர்வாழ்வுக்கழக கிளைகளும் பொறுப்பெடுத்துள்ளன. குறிப்பாக சிறுவர் இல்லங்கள். ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு சிறுவர் இல்லத்தை பொறுப்பெடுத்துள்ளன. போசாககு நிலையங்களையும் அவ்வாறு பொறுப்பெடுத்துள்ளன. அதாவது சர்வதேச நிறுவனங்களால் பங்களிப்பு செய்ய முடியாத நிதியீட்ட முடியாத வேறு யாரும் இந்த திட்டங்களை செய்யமாட்டாத நிலையில் அப்படியான திட்டங்களை வெளிநாட்டு தமிழர் புனர்வாழ்வு கழகத்தைக் கொண்டு செய்கின்றோம்.

***கேள்வி:-*** ஆழிப்பேரலைக்குப் பின்னரான சிறுவர் நலச் செயற்பாட்டு திட்டங்களில் தமிழ் புனர்வாழ்வுக்கழகம் எவ்வாறான அணுகுமுறைகளைக் கையாளுகின்றது?

***பதில்:-*** ஆழிப் பேரலையைப் பொறுத்தவரையில் சிறுவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அதே நேரத்தில், ஆழிப் பேரலையாலும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அதாவது தாய் தந்தையை குடும்ப உறுப்பினரை, உறவினரை இழந்துள்ளார்கள். வீடு சொத்துகளையும் இழந்துள்ளனர். பாடசாலைகளை இழந்துள்ளனர். படிக்க இயலாது தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர். அவாகளால சந்தோசமாக விளையாடகூட முடியாது இந்த வகையில் உயிரிழப்பு,காயம் உள ரீதியான பாதிப்பு என்பன ஏற்பட்டுள்ளன.

இதில் உள ரீதியான பாதிப்புத்தான் எமக்கு பாரிய சவாலாக உள்ளது. ஏனெனில் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் உள ரீதியான தாங்கு செயற்பாடுகள், பராமரிப்பு நிலையங்கள் ஒன்றும் இல்லை என்றுதான் சொல்லலாம் அந்த அளவுக்கு போதிய நிறுவனங்கள் இல்லை. பயிற்சி பெற்றவர்கள்கூட இல்லை. அதே நேரத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை பொறுத்த வரையில் முதலாவது நாங்கள் அவர்களுக்கு சில வசதிகளை சந்தோசமாக வாழ்வதற்கு செய்து கொடுக்க வேண்டி இருந்தது.

அந்த வகையில் அவர்களை சிறுவர் இல்லங்களில் வளர்க்க வேண்டும் என்ற கொள்கை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு இல்லை. அது சர்வதேச சட்டத்திற்கு முரணானது. அது மட்டுமல்ல உளவியல் ரீதியாக பொருத்தமானதும் அல்ல. எந்த ஒரு குழந்தையும் தன்னுடைய அம்மா அப்பாவுடன் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் அவர்களது சகோதரர் அல்லது உறவுகளுடன் இருக்க வேண்டும். வித்தியாசமான சூழலுக்கு கொண்டு செல்லக்கூடாது.

இரண்டாவது சில தவிர்க்க முடியாத காரணங்களினால் சிறுவர் இல்லங்களை அமைக்க வேண்டி ஏற்பட்டது நாங்கள் அவ்வாறு செய்யாமல் விட்டால் சில நிறுவனங்கள் வித்தியாசமான முறையில் அவர்களை வித்தியாசமான கோணத்தில் வளர்க்கலாம். அதனால் நாங்கள் எமது நாடு, பண்பாடு, மொழி, சூழலிற்கேற்ப வளர்க்க வேண்டுமாயின் சிறுவர் இல்லங்களை அமைக்க வேண்டியுள்ளது.

முல்லைத்தீவிலும், வாகரையிலும் எம்மால் சிறுவர் இல்லங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதோடு பாதிக்கப்பட்ட எங்களுடைய சிறுவர் இல்லங்களையும் புனரமைத்துக்கொண்டு வருகிறோம். பெற்றோர்கள், உறவினர்கள், குடும்பத்தவர்கள் யாராவது இருந்தாலும் அவர்களைத் தொடர்பு கொண்டு அவர்களிடம் அந்தப் பிள்ளைகளை கொடுத்து அவர்களுக்கான சில உதவிகளைச் செய்து வருகிறோம்.

எல்லாக் கிராமங்களிலும் சிறுவாகளுக்கான விளையாட்டு மைதானங்கள், சிறிய நூலங்களை அமைக்கும் செயற்பாடுகளைச் செய்கிறோம். முன்பள்ளிகளை அமைத்துக கொண்டு வருகிறோம். அதாவது பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் மனோநிலையை இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் செயற்பாட்டையே நாங்கள் செய்கின்றோம்.

இதில் எங்களோடு சேர்ந்து பல நிறுவனங்கள் வேலை செய்கிறார்கள். குறிப்பாக சிறுவர் பாதுகாப்பு நிதியம் (Save the Childem fund) அத்தோடு Unicef இதில Unicef இன் பங்களிப்பு குறைவானது. SCF நல்ல பங்களிப்பை செய்து கொண்டிருக்கிறது. அதோடு எமது நிதியையும் பாவித்து இந்தப் பணியைச் செய்கின்றோம்.

ஹரிக்கேன் கத்ரீனால் பாதிக்கப்பட்ட அமெரிக்கா லுசியானா, அலபாமா, மிசிசிப்பி மாநில மக்களுக்கு உதவத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்திருந்தது. இதனுடைய முன்னேற்றம் எவ்வாறு இருக்கிறது?

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நோக்கம், அனர்த்தங்கள் எங்கு நடந்தாலும் உதவி செய்வதாகும். இரண்டாவது உலகத்தில் உள்ள பல்வேறு நாடுகளில் குறிப்பாக தமிழர்கள் வாழும் நாடுகளில் அந்த நாட்டு மக்கள் எமக்கு நிறைய உதவிகளைச் செய்திருக்கிறார்கள். அந்த வகையில் இது நன்றிக்கடன் செலுத்துவதாகவும் அமையும். ஆனால் முதலாவது மனிதாபிமானம் அந்த வகையில் தான் அமெரிக்காவில் ஹரிக்கேன் கத்ரீனாவின் தாக்கத்தின் போதும் புனர்வாழ்வுக் கழகத்தின் அமெரிக்காக்கிளை தனது பணியைச் செய்ய முன்வந்திருக்கிறது.

அத்தோடு கனடா புனாவாழ்வுக்கழகமும் இணைந்துள்ளது. முதற்கட்டமாக நிதி சேகரிப்பில் ஈடுபட்டு அந்த நிதியை அவர்களுக்கு வழங்கியுள்ளோம். அங்குள்ள உளளூர் அமைப்புகள் ஊடாக இரண்டாவது கட்டமாக எங்களுடைய தொண்டர்களை, மருத்துவ அணியினரை அங்கு கொண்டு சென்று மக்களுக்குச் சேவைகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம்.

அதைச் செய்வதற்கிடையில் அடுத்த ஹரிக்கேனும் வந்து தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. என்றாலும் கூட, நாங்கள் எங்கள் பணியை, எங்கள் பங்களிப்பை செய்வோம். இது ஒரு மனிதாபிமானப்பணி. இது அமெரிக்காவில் மட்டுமல்ல எல்லா இடத்திலும் தான் கடந்த வருடம் டென்மார்க்கில் ஒரு வெடிவிபத்து ஏற்பட்டது. ஒரு தொழிற்சாலையில் அங்கு முதலாவதாக புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள் தான் போய் மீட்புப்பணியைச் செய்தார்கள். சுவிற்சர்லாந்தில் ஒரு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. எமது சுவிஸ் கிளைத் தொண்டர்கள் சுவிஸ் காவல்துறையுடன் சேர்த்து மீட்புப்பணியில் ஈடுபட்டார்கள்.

அதேபோல தென்னிலங்கையில் 2003-இல் ஏற்பட்ட வெள்ள அழிவிற்குக்கூட நாங்கள் நேரடியாகச் சென்று உதவி செய்திருந்தோம். புனர்வாழ்வுக் கழகத்தைப் பொறுத்தவரையில் எல்லா நாடுகளிலும் அனர்த்தங்கள் நடைபெறும் காலப்பகுதியில் எங்களுக்கு வசதிகள் இருந்தால்- அந்த வசதிகளை நாங்கள் ஏற்படுத்திக்கொள்வோம். நாங்கள் சேவை செய்யத் தயாராக இருக்கின்றோம்.

ஆழிப் பேரலையால் இல்லிடங்களை இழந்த மக்களுக்கு தற்காலிக வாழிடங்களை அமைத்துக்கொடுத்த தமிழர் புனர்வாழ்வுக கழகத்தின் பணியைப் பாராட்டி சிறிலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி விருது வழங்கியுள்ளார். இதுபற்றி தங்கள் கருத்து என்ன?

பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2 ஆம் கட்டப்பணிக்காக இந்தத் தற்காலிக இருப்பிடங்களை அமைத திருந்தோம். உண்மையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தான் உள்ளூர் சூழலுக்கேற்ப, மக்கள் பாதுகாப்பாக இருக்கக்கூடிய தறிகாலிக வீட்டுத்திட்டத்தை வடிவமைத்தது. அதன்பிறகுதான் மற்ற நிறுவனங்கள் அதைச் செய்யத் தொடங்கின. அரசாங்கம் ஒரு குறித்த தராதரத்தை TAFRAN அமைப்புக்கூடாக இதற்கு வழங்கியிருந்தது.

இந்த வேலைகளில் 300றகும் மேற்பட்ட நிறுவனங்கள் ஈடுபட்டாலும் உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களில் 9நிறுவனங்களே விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டன. அதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் ஒன்று கடந்த காலங்களில் நாம் இந்தப் பணியைச் செய்வதறகு அரசாங்கத்தின் சில திணைக்களங்களும் பாதுகாப்புப் படைகளும் மிகுந்த சிரமங்களையும், தடைகளையும் ஏற்படுத்தி வந்தன.

நாங்கள் பல தடவைகள் அரசாங்கத்திடம் இது தொடர்பாக முறைப்பாடு செய்திருக்கிறோம். குறிப்பாக எந்தப் பணியைச் செய்ததற்காக எமக்கு விருது வழங்கப்பட்டதோ, அந்தபணியைச் செய்த எங்களது பணியாளர்கள் சிறிலங்கா காவல்துறையால் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டனர்.

அந்தப் பணிக்காகக் கொண்டு சென்ற பணமும் பறிமுதல் செய்யப்படடது. தற்பொழுதுதான் இந்த விருது வழங்கப்பட்ட பின்புதான் அந்தப் பணம் எமக்கு மீளக்கிடைத்தது. இவ்வளவு தடங்களுக்கும் மத்தியில் நாங்கள் எங்கள் பணியைத் திருப்திகரமாகச் செய்தோம். அதற்காகத்தான் ஜனாதிபதியால் எமக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. எமது பணிகளை பலா பாராட்டியிருக்கிறார்கள். சர்வதேச நிறுவனங்கள். வெளிநாட்டுத் தூதாகள், மக்கள் எல்லோரும் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் புலிகளுக்கு நிதி அளிக்கின்றது என்ற குற்றச்சாட்டினை ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு நிராகரித்து இருப்பதாக அறிய முடிகின்றது. இது பற்றிய விபரங்களைத் தர முடியுமா?

நாங்கள் விடுதலைப் புலிகளுக்குக் காசு சேர்க்கிறோம் என்பது உண்மையிலேயே மீடியாக்களால் எந்தவிதமான ஆதாரங்களும் இல்லாமல, எந்தவிதமான சாட்சிகளும் இல்லாமல் பரப்பப்பட்ட ஒரு வதந்தி. ஜேர்மன் நாட்டைப் பொறுத்தவரை அங்குள்ள ஒன்று அல்லது இரண்டு மீடியாக்கள் இப்படியான வதந்தியைப் பரப்பிவிட்ட காரணத்தால் ஜேர்மனிய மக்கள் மத்தியிலும் எங்களுக்கு உதவும் நிறுவனங்களுக்கு மத்தியிலும் TRO காசைப் புலிகளுக்கு வழங்குகின்றது. என்ற கதை பரப்பப்பட்டதால் அதற்கெதிராக ஜே[illegible]மனிய உள்நாட்டமைச்சில் நாங்கள் முறையிட்டோம் இப்படி நாங்கள் செய்யவில்லை அதற்கான ஆதாரங்கள் கிடைத்தால் நிருபிக்கும்படி நாங்கள் முறையிட்டோம்.

3 வாரங்களுக்கு முன்னர் ஜேர்மனிய உள்நாட்டலுவல்கள் அமைச்சு அதனைப் பரிசீலித்து உண்மையில் புனர்வாழ்வுக்கழகம் மனிதாபிமானப் பணிபுரியும் நிறுவனம். அவ்ர்கள் விடுதலைப் புலிகளுக்கு காசு கொடுப்பதில்லை. அவர்கள் நல்ல வேலை களைத்தான் செய்கிறார்களென்று எங்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறார்கள்.

அத்தோடு கொழும்பில் அ[illegible]மையில் அமெரிக்கத் தூதுவரிடம் தென்னிலங்கை ஊடகவியலாளர் ஒருவர் கேட்டார். நீங்கள் ஏன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைத் தடை செய்யவில்லை. என்று அவருடைய பதில் தடைசெய்வதற்குரிய வேலைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செய்யவில்லை. ஒரு நிறுவனத்தை தடை செய்வ தென்றால் அது பயங்கரவாத அமைப்புக்களுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டும். அல்லது சேர்ந்து இயங்க வேண்டும. அப்படியான செயற்பாடுகளில தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபடுவதில்லை. அவர்கள் சிறந்த மனிதாபிமானப் பணிகளில் தான் ஈடுபடுகிறார்கள். குறிப்பாக அமெரிக்காவின் தர நிர்ணயங்களை ஏற்றுக் கொண்டு அதற்கேற்ப தமது பணிகளைச் செய்கிறார்கள் எனவே அவர்களைத் தடைசெய்ய வேண்டியதில்லையென்று நேரடியாகக் கூறியிருக்கிறார்.

நாங்கள் மக்களுக்குரிய பணிகளைச் சரியாக, திருப்தியாக உரிய முறையில் செய்கின்றோம். இந்த அணுகுமுறையை பொறுத்தவரையில் மற்றைய் நிறுவனங்கள் அவ்வாறு இல்லை அரசாங்கத்தை பொறுத்தவரையில் இது அதற்கு பெரியதொரு சவால், பேரினவாத அமைப்புக்கள் இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுக்களைச சுமத்தி சர்வதேச நிறுவனங்களிலிருந்து கிடைககும் நிதிகளை நிறுத்தலாம். ஆளணிகளைக் குறைக்கலாமென்பதுதான் அவர்களின் நோக்கம் சர்வதேச நிறுவனங்கள் எமது வேலைகளில் பூரண திருப்தி அடைந்துள்ளார்கள். அதே நேரத்தில் அவர்கள் இந்த நிலைமைகளை நன்கு புரிந்துள்ளனர்.

இந்நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணி சர்வதேச ரீதியாக விளங்கிக்கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்[illegible] எனக் கொள்ளலாமா?

குறிப்பாக இப்போது அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உட்பட எங்கள் பணிகளை ஏற்றுக்கொண்டுள்ளன. நாங்கள் மிகத் திறமையாகப் பணியாற்றுவதை ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த வகையில் சர்வதேச நாடுகள் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியை உத்தியோக பூர்வமாக ஏற்றக்கொண்டுள்ளனா.

இல்லாவிடின் அந்த நாடுகளில் எம்மை செயற்படவிட்டிருக்க மாட்டார்கள். அல்லாவிட்டால் அந்நாடுகளில் இயங்கவோ, நிதி சேர்க்கவோ, செயற்படவோ முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக ஐக்கியநாடுகள் சபைச் செயலாளர் கோபி அனான் கூட பாராட்டுத் தெரிவித்திருக்கிறார். சுனாமிக் காலகட்டத்தில் எமது பணியைப் பொறுத்தவரையில் பெரிய [illegible]வற்றியையும், சர்வதேச ரீதியான அங்கீகாரமும் கிடைத்தன என்று தான சொல்முடியும். (முற்றும்)

உலகத்திலேயே கல்வி, முக்கியமானது மட்டுமல்ல, அதிசய மாற்றங்களையும் உண்டுபண்ண வல்லது.
-இங்கர் சால்-

வலம்புரி

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர் நலன்பேணவேண்டும்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாததனால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ஆழிப்பேரலை தாக்கம் நடந்து பத்து மாதங்கள் கடந்து விட்டபோதிலும் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை கிடப்பில் போடப்பட்டு விட்டதால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர்.

மழைக்காலம் ஆரம்பித்து விட்ட நிலையில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகைகளில் வாழ்க்கை நடத்துவதென்பது சாதாரணமான விடயமல்ல.

எனினும் இது பற்றி அரசு எந்தவித கவனிப்புமின்றி காலம் கடத்துகின்றது. இது ஒரு புறம் இருக்க, மறுபுறத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நிலை பெரும் கவலைக்குரியதாகும்.

பாடசாலைகள், தளபாடங்கள் மற்றும் பௌதிக வளங்கள் சேதமடைந்த நிலையில் மரங்களுக்கு கீழ் இருந்து படிக்கும் பரிதாப நிலை கவலைக்குரியதாகும்.

குறிப்பாக வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மழையில் நனைந்து கல்வி கற்கும் நிலையில் உள்ளனர்.

மர நிழலில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் மழைவந்தபோது தாம் பயன்படுத்திய கரும்பலகைய்யைத் தூக்கி தலைக்குப் படித்த பரிதாபத்தை வடமராட்சி கிழக்கில் காண முடிந்தது.

கல்வியென்பது சமத்துவமாக வழங்கப்பட வேண்டியது. அதற்கு அடிப்படையாக பௌதிக வளங்கள் மற்றும் கற்பித்தல் சாதனங்களில் ஓர் சமச்சீரான பங்கீடு இருப்பது அவசியமாகும்.

ஒரு பகுதி மாணவர்கள் கணனி கற்றுக் கொண்டிருக்கையில், இன்னொரு பகுதி மாணவர்கள் இருந்து படிப்பதற்கு கட்டடம் இன்றி மரநிழலின்கீழ் படிப்பது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

கல்வியில் ஏற்படும் இத்தகைய ஏற்றத் தாழ்வுகள் நாட்டில் ஓர் வர்க்க வேறுபாட்டிற்கு -படித்தவர், படியாதவர் என்ற பாகுபாட்டிற்கு வழிவகுக்கின்றது.

இதனால் நாட்டில் வன்முறைகளும் ஒற்றுமையீனங்களும் ஏற்படுகின்றன. எனவே சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாணவர்களும் மற்றைய மாணவர்கள் போன்று கல்வி கற்பதற்கான வளங்களை வழங்கும் பொறுப்பு அரசினுடையதாகும்.

அதேநேரம் கல்விசார் அதிகாரிகளும் வறுமைப்பட்ட, யுத்தம் மற்றும் ஆழிப்பேரலை போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும்.

வறுமைப்பட்ட மாணவர்கள் என்ற நினைப்பில் அவர்களின் கல்விச் செயற்பாட்டில் வள ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டப்படுமாயின் அது ஏழைமாணவர்களுக்குச் செய்யும் பெரும் துரோகத்தனமானது.

கல்வி அதிகாரிகள் அவ்விதம் செயற்படுகின்றபோது நல்மாணாக்கனை இச்சமுதாயம் இழந்துவிட நேரிடுகின்றது. இன்று மாணவர்களின் நடத்தை மாற்றங்களுக்கு இதுவும் ஒரு காரணி என்பதால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விச்செயற்பாட்டிற்கு உதவ அனைவரும் முன்வரவேண்டியது அவசியமாகும்.

# பேச்சு, அதிகாரப் பகிர்வு மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

### மஹிந்த உடனிருந்த மேடையில் ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதிப் பேச்சுக்கள் மூலம் அதிகாரப் பகிர்வு மேற்கொள்வதே தீர்வாக அமையும் என்று சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

குருநாகல் வாரியபொலவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பிரசாரக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்துப் பேசியபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பொதுமக்கள் கூட்டமைப்புக்குத் தலைமை வகிக்கும் சுதந்திரக் கட்சியானது யார் எதிர்த்தாலும் நாட்டின 75 சதவீத மக்களால் ஆதரிக்கப்பட்டிருக்கும் அதிகாரப் பகிர்வு மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்.

என் உயிருக்கு ஆபத்து இருந்தபோதிலும் கட்சியின் கொள்கைகளை முன்னெடுத்துச் சென்றேன். எந்த ஒரு தனிமனிதராலும் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை மாற்றிவிடமுடியாது.

இனப்பிரச்சினைக்கு சுதந்திரக்கட்சி முன்வைத்துள்ள தீர்வை எதிர்க்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவும் பாராட்டியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ உண்மையைத் தான் தெரிவித்துள்ளார். இந்தக் கட்சி யாருக்கும் எழுதிக் கொடுக்கப்படவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பண்டாரநாயக்கர்களின் கட்சியும் அல்ல வேறு யாருடைய கட்சியும் அல்ல.

இது மக்களின் கட்சி. ஐக்கிய தேசியக் கட்சியைவிட இந்த நாட்டு மக்களுக்கு நாங்கள் பத்து மடங்கு பணியாற்றியுள்ளோம். ஜனாதிபதி பொறுப்பிலிருந்து ஓய்வுபெற்ற பின்பு எந்த அரசு பொறுப்பிலும் நான் நீடிக்கப்போவதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் என்னை மறந்து விடுவார் என்று நம்புகிறேன். என்னுடைய நாளாந்த வாழ்க்கையை எவ்வித அச்சமும் இல்லாமல் கழிக்கவே விரும்புகின்றேன் என்று கூறியுள்ளார்.

இக் கூட்டத்தில் பேசிய மஹிந்த ராஜபக்ஷ, சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வதாக உறுதியளித்தார்.

ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெறும் சந்திரிகா குமாரதுங்க. அரசில் இருந்து ஓய்வுபெறக் கூடாது. சுதந்திரக் கட்சியை வழி நடத்தவேண்டும் என்றும் மஹிந்த கேட்டுக் கொண்டார்.



சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளரான அனுரா பண்டாரநாயக்க மற்றும் மஹிந்தவை ஆதரிக்கும் ஜே.வி.பியின் தலைவர்கள் எவரும் இந்தத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

வாரியபொல பிரதேசததல் நேற்று முன்தினம் பெருமளவு ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக வெளியான தகவலையடுத்து ஜனாதிபதியின் இந்தக் கூட்டத்திற்கு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படடிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ற)

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கிடைக்கப்பெற்ற தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரம வருமாறு:-

### யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

மி.துமிலன்- 168,மோ.மோகனலக்ஷன்- 164, பா.சங்கீர்த்தன்-162, சி.சஞ்ஜீவன்-161, ப.கோபிகா 160, ஜெ.ஷஜீஹறன்-160, கு.கௌசிகாந்-158, சோ.திரியம்பகி- 158பே.பிரசாந்தன் 157, மோ.சோபிதன்-157,

ம.பிரகாஸ்-156,யோ.ஜனார்த்தன்-155, இ.விதுஷன்-154, இபிரசாநதன்154, செ.தயாகரன்-151, க.ராகுலன்-149, இ.துஷாந்-149, கு.கோபிசாந்த்-149, வி.யதுஷன்-148, ர.வாத்சல்யா-148,

உ.பிரணவன்-147, ந.பத்மபிரியன்-147, சி.வர்ஷனன்-145, க.பவந்தினி-145, த.விதுஷன்-143, ஆ.மயூரகீர்த்தன்-143, ச.திலக்ஷன்-143, ப.மௌலிகா-143, ஞா.கௌதமி-142, து.லௌஷிகா-141,

சி.சிவசங்கர்-140, ஜெ.ஜெசிந்தன்-140, சி.சாரங்கன்-140, அ.திருவேந்தன்-139, வே.கோகுலன்-139, சி.சிவரதன்-138, மோ.காவேரி-138, ம.கம்சிகன்-138, இ.அஜந்தா-138,மு.விசாகன்-138,

செ.சிவானுஜன்-138, க.பவலஜன்-138,க.திருக்குமரன்-137, கு.உமாசுதன்-136, அ.யதுஷ்னா -136, ர.ஹரிசங்கர்-136, சி.சாந்ததாரணி-136, பு.சிந்துஜன்-135, பி.கோகுலக்கண்ணா-135, லோ.ஆரபி-135,

ஜெ.தமிழ்ச்செல்வன்-135, இ.நிதர்ஷனா-134,சாயிதன்-134,சி.அற்புதன்-134,ச.அனுசன்-134,க.பிரணவன்-134,சி.ஹரிவிகனேஸ்-134, ச.தனஞ்செயன்-133, ஆ.கிருஷிகன்-133, கி.யதுஷா-133,

சி.லக்ஸ்மன்-133, சி.சுதாகரன்-132,ஆ.கௌரிசங்கர்-132, ச.பானுஷா-132,ஜெ.சஞ்ஜீவன்-132, வ.சங்கீத்தா-132, ம.சிவஜெனன்-131, சோ.அபிராமி-131,சி.மதுஷன்-131, பா.ஜனுஷியா-130,

கு.நிருபா-130, க.சிவானுஜன்-129, இ.வித்தியசங்கர்-129, சி.ஷாமினி-128, சி.மாதங்கி -128, பு.தேனிலன்-128,இ.லங்கதா-128, சி.சிவகாந்-127, அ.நிருபன்-127, ர.அனித்தா-127,

கே.கஸ்தூரி-127, வி.ஹரிராஜ்-127, வி.அபிராம்-126, கே.சுபாங்கன்-126, அ.சிவரஞ்சிதன்-126,க.கிரி சாந்-126, ச.நிஷாந்-126,செ.துவா ரகா-125, நா.திலக்ஷன்-125, கு.தக்சினி-125, நா.மோகனசாந -125, இ.வரணிதா-124, கி.மதுஷன்-124, செ.பானுகோபன்-124, மோ.பிரவீண்-124, சி.சாரங்கன்-124.

### புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி

த.பதுஜா-137, மா.கஜானி-134, ஜெ.கிருசிகா-134, கு.மயூரதி-129, கி.திவாகரன்-129, ச.நவகீர்தன்-128 (ற-19)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காக நோர்வே நிதியுதவி

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதறகாக நோர்வே அரசாங்கம் 180 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஊடாக இத் தொகை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் சமூக,பொருளாதார நிலையை மேம்படுத்தல், வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றவற்றுக்கு இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஊடாக நோர்வே வழங்கியுள்ள இந் நிதி செலவழிக்கப்படும் விதம் தொடர்பாக டப்ரன அமைப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்புப் பணிகள் விரைவுபடுத்துவது முக்கியமாகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காகவும், வறுமை ஒழிப்பு உதவிகளை வழங்குவது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாக நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸகர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

## பொலிஸாரின் விளக்கமறியல் நீடிப்பு; கண்காணிப்புக் குழு கவலை தெரிவிப்பு

மூன்று பொலிஸாரின் விளக்கமறியலை தமிழீழ நீதிமனறம் நீடித்துள்ளமை குறித்து இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு கவலை தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் வில்ஜ குஜ்வோனென இது குறித்து கூறுகையில், 3 பொலிஸாரையும் விடுதலைப் புலிகள் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப ஹொக்லண்ட் 3 பொலிஸாரையும் விடுதலை செய்ய முன்னர் வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியில் அனுமதியின்றி நுழைந்ததால் 3 பொலிஸாரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் விளக்கமறியலை தமிழீழ நீதிமன்றம் எதிர்வரும 25ஆம திகதி வரை நீடித்து உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



## சாயி அருளமுதம்

சபலங்களுடனும் ஆசைகளுடனும் சேர்ந்து மனத்தை உடைப்பதன் மூலம் மோட்சம் எனப்படும் விடுதலை ஏற்படுகிறது. ஆயினும் புலன் வழி ஆசைகளாகிய தும்புக்கவசத்தினால் அது சுற்றி மூடப்பட்டிருக்கும் போது அது எங்ஙனம் சாத்தியமாகும்? அவற்றை ஆகற்றி சித்தத்தை இறைவனுக்கு அர்ப்பணித்து அதை அவர் முன்னிலையில் தகர்த்தெறியுங்கள். அந்தக் கணமே விடுதலை பெற்று விடுவீர்கள்.

நாளாந்த நற்சிந்தனை

# புலமைப் பரிசில் பெறுபேறு வெளியாகியது ஜோன் பொஸ்கோ மாணவன் முதலிடம்

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இப் பரீட்சையில் தமிழ்மொழி மூல மாணவர்கள் இருவர் அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுள்ளனர். யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த பேரானந்த ராஜா டினேசன், அக்குறனை முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த முகமட் நவ்பர் ஹாதிப் ஆகியோர் இருவருமே இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளனர். இவ்விருவரும் தலா 176 புள்ளிகளைப் பெற்றுள்ளனர். மூன்றாம் இடத்தை கண்டி விகாரமகாதேவி பாலிகா மகர்வித்தியாலயத்தைச் சேர்ந்த சிறிதா நாகிபாலனும் நான்காமிடத்தை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவனும் ஐந்தாம் இடத்தை மீசாலை மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவனும் பெற்றுள்ளார்கள்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த மி.துமிலன் 168 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் மூன்றாம் இடத்தில் உள்ளார்.

மேலும் நேற்றுக்கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் 96 மாணவர்களும் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் 48 மாணவிகளும் சித்தியடைந்துள்ளனர்.

யாழ் மாவட்டப் பாடசாலைகளின் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவற்றைக் கல்வித்திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை புலமைப் பரிசில் பரீட்சைப் பெறு யாழ். மாவட்ட வெட்டுப் புள்ளி 124 என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-8 ,19)

# ஏ.எம்.ஹிஸ்புல்லா சி.மு.காவில் இணைவு

(கொழும்பு)

தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம். எல். ஏ. எம்.ஹிஸ்புல்லா சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டார்.

காத்தான்குடி கலாசார மண்டபத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ்ஹக்கிம் முன்னிலையில் நடை பெற்ற ஊடக மாநாட்டில் வைத்து ஹிஸ்புல்லா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டார்.

இவர் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹஸன் அலியிடமிருந்து அங்கத்துவ பற்றுச்சீட்டை பெற்றுக்கொண்டார்.

நிந்தவூரில் ஐ.தே.க வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் முஸ்லிம் காங்கிரஸின் பரப்புரைக்கூட்டத்திலும் இவர் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்று தேசிய முஸ்லிம் காங்கிரஸாக செயற்பட்டு வரும் அக்கட்சியின் செயலாளர் நாயகம் எச்.எம்.ஹரிஸ் உப தலைவர் எம்.அசீஸ் ஆகியோரும் இன்று அல்லது நாளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(ச-4,19)

## புலிகளின்...

குறை காரணமாக உடனடியாக அவ்விடத்திற்கு வர இயலாது என கண்காணிப்புக் குழுவினர் பதிலளித்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினருக்கு எழுத்து மூலமாக தெரிவித்திருப்பதாகவும் இன்று இது தொடர்பாக சம்பவ இடத்திற்கு கண்காணிப்புக்குழுவினர் வரவிருப்பதாகவும் மட்டக்களப்பு அரசியல் துறையினர் தெரிவித்தனர்.

(ச-4)

## யாழ்.மத்திய கல்லூரி...

நந்தசேகரன் மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தர விட்டார்.

யாழ்.மத்தியகல்லூரியின் பழைய மாணவர்களின் அழைப்பின்பேரில் லண்டனுக்கு சென்றிருந்த அதிபர் இராசதுரை கடந்த சில நாட்களுக்கு முன்னரே யாழ்ப்பாணம் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபர் ந.சிவகடாட்சம் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ச-19,37,51)

## அதிபர் சுட்டுக் கொல்லப்...

நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களில் கல்விபயிலும் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை பகிஷ்கரிக்குமாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதிபர் சிவகடாட்சம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அதிபராக கடமையேற்ற காலம் முதல் பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் வளர்ச்சிக்காகவும் முழுநேரமும் அர்ப்பணிப்போடு உழைத்தவர். அன்பும் பண்பும் கண்டிப்பும் ஆளுமையும் நேர்மையும் துணிச்சலும் மிக்க பள்ளி முதல்வராக சேவையாற்றிவந்துள்ளார்.

அதிபர் ந. சிவகடாட்சம் சமாதான உடன்படிக்கைக்கு முன்னர் மட்டுமன்றி அதன் பின்னர் குறிப்பாக அண்மையில் இராணுவ ஆக்கிரமிப்புப்பிரதேசங்களில் அரசியல் பணிகளை இடைநிறுத்தி வீட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் வெளியேறிய பின்னரும் கூட யாழ் குடாநாட்டு மக்களிடையே அரசியல் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதிலும் தமிழ் மக்களை தமிழ் தேசிய தலைமையின் பின்னால் அணிதிரள செய்வதிலும் முன்னின்று உழைத்தவர் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## தேர்தல் ஆணையாளருடன்...

வேண்டும். அதேநேரம் இவ்அலுவலகங்களில் தேர்தல்வேட்பாளர்களின் உருவப் படங்களையும் ,பதாதைகளையும் வைக்க முடியும். வேட்பாளர்கள் பயணம் செய்யும் வாகனங்களில் மட்டுமே பிரசார சுவரொட்டிகளை பயன்படுத்த முடியும் என தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டார்.

அனுமதி வழங்கப்படாத வாகனங்களில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமானால் பொலிஸாரால் அவ்வாகனங்கள் கைப்பற்றப்படும். பொது இடங்களில் தேர்தல் சுவரொட்டிகள் விநியோகிக்கப்படுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

அரசாங்க இலத்திரனியல் ஊடகங்களில் வேட்பாளர்களுக்கு வழங்கப்படும் வானொலி நேரம் தொடர்பாகவும் தேர்தல் ஆணையாளர்,கட்சிகளின் செயலாளர்களுக்கு விளக்கினார்.

அதேவேளை அனைத்து வேட்பாளர்களுக்கும் உரிய முறையில் தேர்தல் பிரசார நேரம் குறித்த இலத்திரனியல் ஊடகங்களினாலோ ஒதுக்கப்படாவிட்டால் அதனை மேற்பார்வை செய்ய தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

(ச-4)

## கோப்பாய் ...

சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக அரும் பணியாற்றினார்.

சமூக மேம்பாட்டிற்காக கடுமையான தனது உழைப்பை நல்கினார். எல்லாவற்றிற்கும் மேலாக தாயக விடுதலையை நேசித்து எமது தலைமையை ஏற்று விடுதலையின் வீச்சுக்காக தனது இறுதி மூச்சுள்ளவரை செயற்பட்டார்.

கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் செயலர் மணிமூலம் மக்கள் எழுச்சி நிகழ்வுகள் பலவற்றை முன்னின்று நடாத்தினார்.

எனவே அமரர் திரு. ந.சிவகடாட்சத்தின் தாயக நேசிப்பையும் விடுதலைக்கான உழைப்பையும் சமூகப்பணிகளையும் கௌரவித்து இவருக்கு நாட்டுப்பற்றாளர் எனும் கௌரவத்தை வழங்கி எமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றோம்.

இவரது ஈடுசெய்யமுடியாத இழப்பினால் துவண்டு நிற்கும் இவரது துணைவியார், பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கும் எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாயக விடுதலையை நேசித்த நாட்டுப்பற்றாளர் திரு.சிவகடாட்சத்தை எதிரிகள் சுட்டுக் கொன்றதன் மூலம் எமது மக்களது சுதந்திர தாகத்தை அழித்துவிட எண்ணும் எதிரிகளதோ,துரோகிகளதோ எண்ணம் என்றுமே நிறைவேறப்போவதில்லை. மாறாக மக்களை மேலும் கிளர்ந்தெழச் செய்து எமது தாயக விடுதலையை மென் மேலும் வீச்சும் வீரியமும் பெறவைக்கும் என்பதே வரலாறு பகரும் உண்மையாகும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ச-4)


SRI LANKA RED CROSS SOCIETY

**Sri Lanka Red Cross Society**

Working in conjunction with the Australian Red Cross (ARC)

**Vacancies with on the ARC/SLRCS First Aid project**

**First Aid Program Officer** ***(based in Jaffna)***

Seeking an individual who has a commitment to the Red Cross and Red Crescent Movement and its mission. Must have knowledge of First Aid, well developed skills in program development and implementation. ability to mobilise volunteers and good communication skills. Expected to travel within Jaffna District.

**Specific Responsibilities**

(i) Development of Plan of Action for Red Cross First Aid Training Program
(ii) Develop Database of first aid instructors and providers
(iii) Develop Yearly Activity Plans
(iv) Mobilise community volunteers to participate in programs
(v) Implementation, monitoring and reporting to Headquarters and Donor on Program
(vi) Logistical support for programs
(vii) Liaison with government authorities and other NGO's in health and education sector
(viii) Budget preparation and financial management/reporting for first aid program

**Qualifications**

(i) Degree level education in health or education
(ii) Minimum of five years in similar position
(iii) First Aid training certificate preferred
(iv) Good spoken and written English
(v) Proficient computer skills, specifically word-processing software
(vi) Experience with projects budgets

The deadline for application is 19 October.Only short-listed candidates will be contacted.Bio-data and coverint letter outlining why you consider yourself suitable for the position should be sent under registered mail to:

Branch Executive Officer, Sri Lanka Red Cross Society, Jaffna Branch, No.73 Kandy Road, Jaffna.

**Clearly mark envelopes with `ARC Vacancies'**

**Applicants are encouraged to outline all relevant skills and experience. A very competitive salary will be offered to well qualified applicants.**



மனோகரா யாழ்.

பார்த்திபன் .லட்சுமிராய். வடிவேல்

நடித்த

குண்டக்க மண்டக்க...

கா:நே: 10:30, 02:30, 6:30, 9:30 (பு:நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

சரத்குமார். வைகைப்புயல் வடிவேலு

நமீதா நடித்த

சாணக்கியா

காட்சி நேரம்:

10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம் .லைலா. விவேக்

நாசர் மற்றும் பலர் நடித்த

தில்

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.